உ

முருகன் துணை

விவேகபாநு

ஒரு இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

ஆசிரியன்:—எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" "உத்தமனாயிரு"

மாலை-க. விபவ௵ ஆடி௴ 1928௵ ஜுலை, ஆகஸ்ட்௴ மலர்-ங.

கடவுள் வணக்கம்

துடியென்னு மிடையனம் பிடியென்னு நடைமுகில்
துணையெனும் பிணைய லளகஞ்
சூதென்னு முலைசெழுந் தாதென்னு மலைபுனற்
சுழியென்ன மொழி செயுந்தி
வடியென்னும் விழிபிறையு மதியென்னும் வதனமென
மங்கையர்த மங்க முற்றே
மனமென்னு மொருபாவி மயலென்னு மதுமேவி
மாழ்கநான் வாழ்க வித்தப்
படியென்னு மாசையைக் கடியென்ன வென்சொலிப்
படியென்ன வறியாது நின்
படியென்ன வென்மொழிப் படியின்ன வித்தைநீ
படியென்னு மென்செய் குவேன்
தடிதுன்னு மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

82

நமது வேண்டுகோள்

அறிவிற் சிறந்த அன்பர்காள்!

கல்வி, கேள், ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கும் தங்கட்கு நமது 'விவேகபாநு' பூரண சந்தோஷத்தைக் கொடுக்குமென்றும், ஆகவே, நம் பாநுவினிடத்துத் தங்கட்குப் பூரண விசுவாச மிருக்குமென்றும் நம்புகிறேம்.

தவிர, தாங்கள் இதுகாறும் எத்துணையோ சஞ்சிகைகளைக் கண்ணுற்றிருக்கலாம். ஆயினும், இவ்வுலகத்தில் நம் பாநு புதிதாக உதயமாகி யிருக்கின்றமையால், தாங்கள் நம் பாநுவைப் படித்து வருவீர்களாயின், இது வரை தாங்கள் பார்த்திராத புதிய பல விடயங்களை நம் சஞ்சிகையில் காணலாம் என்பது கவனிக்கத் தக்கது!

மேலும், நம் "விவேகபாநு"வில் இப்பொழுது வெளிவந்திருக்கும் விடயங்களைவிட இன்னும் அதிகமான அரிய பெரிய விடயங்களுடனும், சித்திரப் படங்களுடனும், அதிக பக்கங்களுடனும், குறித்தகாலந் தவறுமல் பிரதிமாதமும் வெளிவரும்.

ஆகவே நம் "விவேகபாநு"வுக்கு தாங்கள் சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிப்பதுடன், தங்கள் பந்துமித்திரர்களையுஞ் சந்தாதாரர்களாய்ச் சேரும்படிச் செய்வீர்களென்று நம்புகிறேம். சுபம்! சுபம்!!

ஜீவகாருண்யம்

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள" [திருக்குறள்]

பெறுதற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்ற நாம் ஜீவன்கள் மாட்டு வைக்கப்படும் கருணைக்கு ஜீவகாருண்யம் என்று பெயர். இரக்கமு மருளும் கருணையாகலான், அதனை அருளுடைமை யென்றும் ஆன்றோர் அறைகுவர். அக்காருண்யம் வாழ்க்கைத் துணை, தாய், தந்தை, மக்கள் முதலாம் தொடர்புடையார்க் கண் எழூம் காதல் போன்றின்றித் தொடர்பு பற்றாது இயல்பாக வெல்லா வுயிர்கண்மேலும் செல்லக் கூடியதாக விருக்கும். யாதாயினும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்குற்ற துன்பத்தானே வருந்துமாறு போல வருந்தும். ஈர முடைமை யென்னுமிச் செல்வம் மேலே வள்ளுவர் கூறியாங்கு செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்ததாம். ஏனெனில், பொருட் செல்வம் அறிவு முதலியன வில்லாத தாழ்ந்தோரிடத்து முண்டாகி அவர்களுயிரையும், பிற வுயிர்களையும் பாதுகாக்க உதவாமற் போவது கண்கூடு. இவ்வொப்புயர்வற்ற அருட்செல்வமோ வெனில் அறிவு முதலிய வற்றால் மேம்பாடடைந்தோரிடம் மாத்திரமே பிறந்து, அவருயிரையும் பிற வுயிர்களனைத்தையும் பாதுகாக்க ஏது உடைத்தா யிருக்கிறது. ஆகவே, மானிடனாய்ப் பிறந்து மோக்ஷத்தை விரும்பும் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் இது இன்றியமையாத வொரு அரும்பொருளுடைய குணமாகும். இது குறித்தன்றே தமிழ் வேதமாகிய திருக்குறளில்,

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை; பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு"

என்று சொல்லப்பட்டுளது;

துன்பத்தினால் வருந்தும் ஜீவனை நோக்குழி 'ஆகா! இதற்கும் இக்கதி யெய்தல் வேண்டுமா?' என்று எண்ணி அச்சீவனுக்காக வருந்தும் போது, அவ்வாறு துயருறுவோன் விரோதியாயினும் அவன் பால்

அன்பேனும் பாநு உதயமாகிறுன். அன்பெனும் சூரியோதயத்தால் வருத்தமுறுவோன் ஒருகால் தனக்குச் செய்திருக்கக்கூடிய கெடுதல்களைப் பொறுத்துக்கொள்ளும விவேகம் வளர்கிறது. அதனுல் வருந்துமுயிர்க்குற்ற உதவியைச் செய்து தன்கடமையை நிறைவேற்றும் குணமுண்டாகித் தன்னலங் கருதாதவனுகின்றுன். சந்தோஷம் நுகர்கிறுன். தான் அவ்விதக் கடமைகளைச் செய்யச் செய்ய அவ்வான்மாவின் ஹிருதயத்தில் விவேகபாநு உதயமாகி, அகங்காரம், மூட நம்பிக்கை முதலிய இருள்களைக் கடிகின்றுன். முடிவில் அன்புஞ் சிவமு மிரண்டல்லவாற்றுல் ஆண்டவனுடைய அரும்பக்தனுகின்றுன். எனவே, ஜீவகாருண்யம் குடிப்புகுந்த இடத்தை அன்பு, பொறுமை, கடமையை நிறைவேற்றல், விவேகம், தன்னலங்கருதாமை, கைமாறுக வாதுதவல், தெய்வ பக்தி, முதலிய அருங்குணங்கள் தேடித் தாமாக வந்தடைகின்றன.

அன்பர்காள்! ஜீவகாருண்யத்திற்கு இத்துணைப் பெருமை யுடைமை பற்றியன்றே? ஒவ்வொரு மதத்திற்கும் ஜீவகாருண்யமே அடிப்படையாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஈண்டு வள்ளுவரின்

"நல்லாற்ரு ஞடி யருளாள்க; பல்லாற்ருற்
றேறினு மஃதே துணை"

என்னும் பொன்னடிகளைக் கவனிக்கற்பாலது.

ஒரு சாரார், " என்னே! நும் வார்த்தையும், மதமும்! ' எல்லாவுயிர்கட்கும் அன்புடையவனுயும், அவற்றினிடம் காருண்ய முடையவனுயு மிரு; ' என்பது எவ்வாறு பொருந்தும்? தாவரங்களும் உயிருள்ளனவாயிருக்க அவற்றை மாத்திரம் எவ்விதம் கொன்று தின்னலாம்? அது ஜீவஹிம்சையின்பாற் படாதா?" என்பவர். என்னே! அவர் மதியீனம்!

நாம் ஒருசெடியினைக் களையின் அம்மாதிரிப்பலச்செடிகளைப் பயிர் செய்து விருத்தியாக்குவது சாத்தியமே. ஒரு ஜீவனைப் பதைக்கப் பதைக்கக் கொன்ருல் அதனைப் போன்ற ஜீவன்களை விருத்தி செய்வது நம்மால் முடிந்த தன்று. நமதுசரீரத்திதிலுள்ள உரோமம், நகம் முதலியவற்றை நீக்கின் நமக்குத் துன்பமில்லாதது போன்று, தாவரங்களின் காய்கனிகளைக் களைவது என்று பெரியார் பொறித்திருக்கின்றனர். தவிரவும், இந்திரியங்கள் கரணங்கள் ஆன இவற்றேடு சம்பந்தப்பட்டார்க்கே சுகதுக்க உணர்ச்சி யுண்டு யென்பதையும் மனத்திற் பதிக்கற் பாலதே.

வேறெரு சாரார், 'நடக்கும்போதும், தூங்கும்போதும் எறும்பு முதலிய பலப்பல ஜீவன்களைக் கொல்லுகின்றதும் ஜீவஹிம்சைபாற் படாதோ! என்பர். அன்னேர்க்கும் யாம் ஒன்று உணர்த்துவ தவசியமாகும். கர்மத்திற்கு மனமே காரணம். ஆகையினுல், மனம் பற்றுத கர்மங்களை ஜீவனைச் சாராதன அக்கர்மங்கள் பாபசம்பந்தமாயினுஞ் சரி, புண்ணிய சம்பந்தமாயினுஞ்சரி, அவற்ருல் யாதொரு பலனும் சித்திக்காதாகையினுல் அவை நம்மை யணுகா. விரிக்கிற் பெருகும். விதண்டாவாதஞ் செய்யாது கடவுள் சந்நிதானத்தில் எல்லாவுயிர்களும் சகோதரர்கள் என்று எவர் கருதுகிறுர்களோ அவர் ஜீவகாருண்யமுள்

ளவராகவே இருப்பார். ஒரு வீட்டில் வளரும் சகோதரர்களில் பல மிக்கவர் தன்னினுமிளைத்தோரை, காரணம் பற்றியோ பற்றுமலோ வதைக்கின் பெற்ற தந்தை எவ்வாறு வருந்துவாரோ அவ்வாறே கடவுளும் என்பதை அன்பர்கள் அறிவார்களாக.

விடயங்கள் இவ்வாறு இருக்கத் தன்னுடைய உடலை வளர்த்தற்பொருட்டு பிறஜீவன்களை வதைசெய்துண்ணும் மாந்தர் மதிதானென்னே! என்னே!!

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிரி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள்!"

மிகுதி சூடுபொருந்திய வெந்நீரையும் தாங்காத உன் உடலின் காலிலே ஒரு முள் தைக்கின், அதை அசைத்து வெடுக்கென்றுப் பிடுங்கி எறியும்போது, கண்ணீர் விட்டு, ஆண்டவனை 'அப்பா' வென்று கூவியழைக்கும் நீ, உன் கத்திக்கு முன்னுல் தன்னுயிரைவிட வருந்தும் ஜீவன் ஐயோ! மனமுருகி கண்ணீர் மல்க, 'அப்பா!' 'அம்மா!' வென்று அலறுமே வென்பதை நினைக்காது நீ மறந்து போனது ஏன்? ஏ பாவி! அன்பின் வடிவமாகிய நீயா ஆண் பெண்ணேடு பிறந்தவன்! ஈண்டு, பல கூறியென்? ஜீவ ஹிம்ஸை செய்யாதவன் பெருமையை வள்ளுவனுர்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார், ஜீவகாருண்ய மற்றுர் கடவுள் கிருபைக்கும், பக்திக்கும் அருகதை யற்றவர்கள்! அற்றவர்கள்!!

ஆண்டவன், நாம் தின்பதற்காகவே இஜ்ஜீவன்களைப் படைத்திருக்கின்றுன் என்று கருதி அவைகளைப் பதைக்கப் பதைக்க கொன்று தின்னும் கொடிய மாந்தர்காள்! நீங்கள் ஏன் பன்றியையும், நாயையும், கழுதையையும், காக்கையையும் தின்னமறுக்கவேண்டும்? கோழியைக் காட்டிலும் அவைகள் எதில் கெட்டவை? மேனுட்டார் மதுவுடன் ஜீவ வதையையும் நிறுத்தி வரும்போது, காருண்யத்தையே அடிப்படையாகக் கொண்ட மதஸ்தராகிய நாம் அவற்றைக் கைவிடாமலிருப்பது அந்தோ! வெட்கம்! வெட்கம்!!

"நல்லா றெனப்படுவ தியாதெனின்; யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி"

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்னும் வேதவாக்கையேனும் உணருங்கள்! இது நிற்க, பலர் ஆடு, மாடு, கோழி, முதலியவற்றைக் கொல்லாதிருப்பதுவும், வேறு எவ்வித ஹிம்சையும் செய்யாதிருப்பதுவுமே ஜீவகாருண்யம் என்று எண்ணுகிறுர்கள். அது முற்றிலும் சரியான அபிப்பிராயமல்லவென்று நாம் அழுத்தமாகக் கூறுகிறோம்.

பசி, தாகம், பிணி, கொலை இவைகளானே வருந்தும் நஞ்சகோதர ஜீவன்களுடன் மக்களையுங் காத்தலை மறத்தல் கூடாது. இனத்தா

ருக்கு மோசம், சூது. வஞ்சனை முதலியன செய்வதும், செய் நன்றியை மறப்பதும் ஜீவஹிம்சைபாற்படும்.

அன்பின் மிக்க சகோதரர்காள்! நம்மவரில் சுமார் 7-கோடி மக்களைத் தீண்டத்தகாதவர் என்று தனியாக ஒதுக்கிவைத்து, அவர்களின் மலங்களைத் தின்னும் நாய் முதலிய பிராணிகளைக் கட்டியணைத்துப் பக்கலில் சரியாசனத்திலமர்த்திக் கொள்ளுவது தானா ஜீவகாருண்யம்?

நெற்குத்தி ஜீவனம் செய்த பல்லாயிரங் கூலியாளர்களுடைய குடும்பத்தைத் தவிக்கவிட்டு நெல் அரைக்கும் இயந்திரங்களும், கடலை உரி இயந்திரங்களும் வைத்து நடத்தி மகிழ்வதா ஜீவகாருண்யம்?

நம் நாட்டுப் பழைய இராட்டினங்களைத் தூங்கும்படிச் செய்து, மான்செஸ்டர் முதலிய அன்னியநாட்டு இயந்திரங்களை ஓடவிட்டு, அவைகளின் சங்கியைகளையும் பெருக்கி, அதனால் ஏழை மக்களின் வயிற்றுப் பிழைப்பில் மண்ணைவாரிப்போடுவதா ஜீவகாருண்யம்?

கற்கனிய கனியும் வியாதியஸ்தர்களுடைய கடைசி நிமிஷங்கள் என்னும் அவ்வேளையில், சௌக்கியப்படுத்துவதற்குமுன் வெள்ளையப்பனைப்பற்றிப் பேசிக்கொள்ளும், ஈரமற்ற பாவி வைத்தியர்காள்! உங்கள் ஜீவகாருண்யம் இதுதானா?

அந்தோ! பசி யென்று வந்தவருக்கு ஒரு பருக்கைதானு மீயாது அவ்விரந்தோர் வாடிய வதனங்கண்டு, 'பசி என்றால் எவ்வாறிருக்கும்? குட்டையா? நெட்டையா? கருப்பா? சிவப்பா? என்று வாய் கூசாது வினவும் பணக்காக்கும் பேய்காள்! உங்கள் ஜீவகாருண்யம் நன்று! நன்று!!

ஈண்டு, பலப்பல பகர்ந்தென்! என்று நந்தாய் நாட்டில் மன, மொழி, மெய்களால், மனப் பூர்த்தியான உபகாரம், கருணைமீதீட்டால், கைம்மாறும், ஜாதிமுறையும் கருதாது செய்யப்படுகின்றதோ அன்றே ஆண்டவன் பாத சேவையை அடைய நம் அடிமை விலங்கு தரிக்கப்படும்.

ஆகையினால், எழுமின்! எழுமின்!! விழிமின்! விழிமின்!! அஹிம்ஸா பரமோ தர்ம:! என்று மனமொழி மெய்மையைப் பிறருக்கு அர்ப்பணம் செய்மின்! செய்மின்!! வாயில்லாப் பிராணிகளைக் கொல்லாது காப்பாற்றுமின்! காப்பாற்றுமின்!! கைகளை விரித்து மேல் நோக்கிக் நெஞ்சம் எண்ணிறந்த ஏழை மக்களின் முகங்களை நோக்குமின்! நோக்குமின்!! அருள் தெய்வம் உங்களிருதயத்தில் உதயமாகப் பிரார்த்தித்து இக்கட்டுரையை இம்முறை இத்துடன் நிறுத்தி, மீண்டும் காலங்கிடைத்தபோது இஜ்ஜீவகாருண்யத்தை ஆராய்வோமாக.

"அனைத்துயிர் ஒன்றெண்ணி அரும்பசி யெவர்க்குமாற்றி
மனத்தினிற் பேதாபேதம் வஞ்சனை சூதும் பொய்யும்
சினத்தையும் தவிர்ப்பாயானால் செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான உபதேசம் சொன்னேன் கண்டாய்"

திருவருட் சகாயம்.

ஜீவகாருண்யச் சிந்து

பழந் தமிழ் நாட்டினிலே—நல்ல
பக்தர்கள் கோடியாத் திகழ்ந் திருந்தார்
அப்பர் பிறந் திருந்தார்—இறைவனை
ஆலால சுந்தரர் தோழமை கொண்டார்
காழியிற் பிள்ளை யாராம்—அந்தக்
கவுணியர் சைவத்தைப் பேணி நின்றார்
மாணிக்க வாசக ராம்—சைவம்
வளரப் பெருமழை பொழிந்து நின்றார்
அந்தனன் றனி னிலே—கெட்ட
அநியாயக் கொலைத் தொழில் நடக்கவில்லை
சூதுபொ றாமை யில்லை—பிறரைத்
துன்புறச் செய்பவர் மலிய வில்லை
பிணியில்லைப் பஞ்ச மில்லை—எண்ணில்
பேச்சினில் செய்கையில் பிழையு மில்லை
வரவரக் கெட்டுப் போச்சு—இரக்கமும்
வாய்மையும் பெருமையும் மறைய லாச்சு
சிவன்கோயில் தரிசன மாம்—அங்கே
சிவவேடப் பெருமைகள் மிகமலி வாம்
அங்கத்தில் திருநீ றும்—நிறைய
அதன்மேலே ருத்ராக்ஷக் கோவைக ளாம்
நாவினில் சிவ நாமம்—நல்ல
நறுமணச் சந்தனம் மார்பி னிலே
மண்டபப் படிசெய்வார்—மேன்மையா
மற்றும்பல திருப்பணி செய்திடுவார்
வயிற்றில்வலி வந்த தானல்—சற்று
வாயா லெடுத்தொரு மயக்க மிட்டால்
ஆட்டா சாமி யென்பவர்—அங்கு
அஞ்சிரண்டுத் தெரியாத பேர்வழிகள்
பிடித்த தடா கறுப்பன்—கூடப்
பேயாண்டி தொடர்ந்திட்டான் பேய்ச்சியுடனே
பூசையொன்று போட வேண்டும்—அதற்குப்
பிடியடா சூலாடு கோழி யுடனே
கொண்டு போய்க் கழுத்தறுப்பாய்—அதனல்
குணமாம் வயிற்றுவலி மயக்க மென்று

கூறியே ஆடுகின்றார்—இதனைக்
குறியெனக் கொண்டுசில மானிடர்கள்
வாயிலாப் பிள்ளைகளாம்—ஆடுகளை
வரிசை வரிசையாய்ப் பிடித்துவந்து
சந்நிதியின் முன்னிறுத்து—மஞ்சள்
தண்ணீரைத் தலைவழி ஊற்றிவிட்டுக்
கொடுத்திடு பலியென்பார்—தண்ணீர்
குறுகுறு வென்னவே உடலசைத்தால்
ஆவெனத் தான்மடக்கி—அதன்மேல்
அஞ்சாமல் யமதூதர் போலேறி
மண்டியிட்டு உட்கார்ந்து—சைவத்தின்
மாண்புறு பெருமையை மறந்தவராய்க்
கத்திகொண்டு கழுத்தறுப்பார்—இந்தக்
காட்சியினைப் பார்ப்பதும் பெரும் பாவம்!
ஐயையோ! முறையாமோ?—இப்படி
அலற வலறவதைத் தான்மடக்கிக்
கழுத்தினை முறித்தறுக்க.—அவைகெட்ட
காரியங்களேதேனுஞ் செய்ததுண்டோ?
மக்களுக்குத் தீங்குசெய்து—ஆடுகள்
மாறாட்டஞ் செய்தகதை கேட்டதுண்டோ?
ஏழைப் பிராணிகளாம்—அவற்றை
எதற்காகக் கொலைசெய்ய வேண்டுமையா!
வயிற்றுவலி அம்மைபேதி—நமக்கு
வரவேண்டு மென்றவைகள் வேண்டவில்லை!
நம்முடைய ஊழ்வினையால்—வருகின்ற
நன்மைக்குந் தீமைக்கும் யார் பொறுப்பு!
ஆடுகள் என்ன செய்யும்—அந்த
அப்பாவிக் கோழிகள் யாது செய்யும்!
ஐயவோ பெரியோரே!—நீங்கள்
அநியாயக் கொலைத்தொழில் செய்யவேண்டாம்!
பயமொன்று மில்லையையா!—இந்தப்
பாழான கொலைத்தொழில் வேண்டாமையா!
தேங்காய் பழமில்லையா—நல்ல
தேனுடன் சர்க்கரை பாலில்லையா!
வேண்டுமட்டு நிறையவைத்து—சுவாமியை
வேணுமட்டுங் கும்பிட்டால் போதுமையா;

காரைச் சிவனடியார் திருக்கூட்டம்.

ஆராய்ச்சிப் பகுதி

பண்டைத் தமிழரும் அவர்களது நாகரிகமும் பண்பும்

தமிழகம் சீர்குலைந்ததேன்?

(முன் தொடர்ச்சி)

மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ் போதகாசிரியர், திரு-கார்மேகக் கோனாரவர்கள், சென்னை செனேட் மண்டபத்தில் 24—11—27ல் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:—

தமிழகத்தின் பிரிவு

இவ்வெல்லைக்குட்பட்ட தமிழகம் முன்னர் செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ் நாடு என்று இரண்டு பகுதிளாகப் பகுக்கப்பட்டிருந்தது. கொடுந்தமிழ் நாடுகள் செந்தமிழ் நாட்டின் தென்கீழ்த்திசை முதல் வடகீழ்த்திசைவரை இருந்தன வென்றும், அவை 12 எனவும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "சந்தனப்பொதியச் செந்தமிழ் முனிவனும், சவுந்திர பாண்டியனெனுந் தமிழ்நாடனும், சங்கப்பலகையும் தழைத்தினிதோங்கும், மங்கலப்பாண்டி வள நாடென்ப" என்ற பழையபாடலால் சங்கம் நிறுவிவித்த தமிழ்மொழி புரந்த பாண்டியர்கள் ஆண்ட பாண்டிய நாடே என்று அறியப்படுகிறது. கம்பர் சேக்கிழார் முதலிய பெரும் புலவர்களும் பாண்டி நன் நாட்டையே செந்தமிழ் நாடென மொழிந்துளர்.

"பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவட தலைநாடு என கொடுந் தமிழ் நாடுகளை செந்தமிழ்நாட்டுத் தென் கீழ்த்திசை முதலாக, வடகீழ்பாலிறுதியாக எண்ணிக்கொள்க" என்று தொல்காப்பியச் சொல்லகாரத்தில் சேனாவரையரும் நச்சினார்க்கினியாரும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் முதலியோர் "தென்பாண்டிகுட்டம், குடம், கற்காவேண்பூழி, பன்றி அருவா அதன் வடக்கு நன்றாய் சீதம் மலாடு புன்னாடு, செந்தமிழ் எதமில் பன்னிருநாட்டன் சேர்" என முன்னையோர் காட்டிய முறையினின்றும் சிறிது வேறுபடக் காட்டியுள்ளார்கள். சேனாவரையும், நச்சினார்க்கினி

யாரும் எடுத்துக்காட்டிய நாடுகளுள் பொங்கர்நாடும் பின்னையோர்காட்டியவற்றிலிருந்து விடுபட்டன. அவர்கள் காட்டாதவனோடும் புனல்நாடும் பின்னையோர் காட்டியவற்றுள் காணப்படுகின்றன.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் செந்தமிழ்நாட்டின் கீழ்த்திசையில் உள்ளனவாக எடுத்துக்காட்டிய பொங்கர்நாடும் ஒளிநாடும் இப்போது இன்னபகுதியில் உள்ளனவென்று விளங்கவில்லை. ஏனைய நாடுகளை தற்பொழுது இன்னபகுதிகளாக உள்ளனவென்று ஊகிக்கக்கூடும். தென்பாண்டிய நாடென்பது கொற்கையைச் சூழ்ந்துள்ள பகுதியும், நாஞ்சில் நாடெனும் பகுதியும் ஆமென்று கருதலாம். குட்டம், குடம், பூழி என்பவை சேரநாட்டுப் பகுதியாகவிருந்த மேற்கடற்கரைப் பகுதிகளாகக் கருதப்படுகின்றன குட்ட நாடென்பது மலையாளத்திலுள்ள குளங் குட்டைகள் நிறைந்த நாடெனலாம். குடநாடு மேற்கிலுள்ளதெனவும், பூழி என்பது மணற்புழுதி மிகுந்த நாடெனவும் கூறத்தகும். கற்கா என்பது கோயமுத்தூருக்கும் மேற்குத்தொடர்ச்சி மலைக்கு மிடையிலுள்ள கல்லும் காடும் நிறைந்த நாடெனப் பொருள்படும். பன்றிநாடென்பது சோழநாட்டிற்கும், பாண்டிநாட்டிற்கும் இடையில் வராகமலையிலிருந்து கிழக்கு நோக்கி நாகப்பட்டினம் வரை செல்லும் பகுதியாம். மலையமா நாடு, சோ வம்சத்தினராகிய மலையமான் என்பவர்களால் ஆளப்பட்டது. இது திருக்கோயிலூர்ப் பகுதியாகும். அருவா நாடு, அருவா வடதலைநாடு என்பன அருவாளர் என்றும் ஓர் வகுப்பினர் வாழ்ந்தநாடு. இவை தற்போது தென்னாற்காடு ஜில்லாவின் பகுதியாகக் கருதப்படுகின்றன. குளிர் மிகுந்த நாடான சீதநாடு நீலகிரியைச்சார்ந்த பகுதி எனலாம்.

வேணாடு, ஆய்வேள் வம்சத்தினராண்ட நாடாகலாம். அது மூங்கில் நிறைந்த நாடு. அது கோட்டயம் முதலாகிய திருவாங்கூர்ப் பகுதியாகும். சீர்வளம் மிகுந்த புனல்நாடு சோழநாடே யாகும்.

மலையாளம் தமிழ்நாடே

பண்டையோர் வகுத்த தமிழ்நாட்டுப் பகுதிகளை ஆராய்ந்தால் தென் எல்லையான குமரிநாட்டை கடல்கொண்டது. மேற்கில் தமிழ் மூவேந்தருள் சேரர்களால் பல்லாயிரம் வருடங்களாக ஆட்சிசெய்யப்பெற்றதும், தமிழ் மொழியில் மிக்க நலம்வாய்ந்த சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, திருக்கைவாச ஞான உலா, பொன்வண்ணத்தந்தாதி முதலிய சங்க இலக்கியங்களும், பண்டைத் தமிழ் நூல்களை ஈந்ததுமான குட்டம், குடம், வேணாடு எனப்படும். கொடுந்தமிழ் நாடுகள் மலையாளம் என்னும் புதுமொழி வழங்கும் நாடாக மாறிவிட்டன. இம் மலையாள மொழி கொடுந்தமிழ் மொழியன்றி வேறன்று. தற்பொழுது மலையாளமெனப்படும் பகுதி முன்னர் தமிழ் நாடாகவே இருந்து பின்னர் புதுப்பெயர் கொண்டது என்பதும், தமிழ்நாட்டிற்கு மேற்கெல்லை கடலேஎனப் பண்டை நூல்களெல்லாம் ஒன்றுபடக் கூறுவதாலேயே தெரியலாகும். இப்பகுதியில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை எதற்கும் தமிழ் மொழிகளும் தமிழ் எழுத்துக்களுமே வழங்கிவந்தன என்றும், சாசனங்களும் அதில் கையொப்பமிட்டவர்கள் பெயரும் தமிழ் மொழியிலேயே இருக்கின்றனவென்றும், ஸ்ரீமான் கோபிநாத

ராவின் "திருவாங்கூர் சாசனத்தொடர்" என்ற நூலால் அறியலாம். மலையாளச் சொற்களை வடமொழியை நீக்கிவிட்டுப் பார்த்தால் தனித்தமிழைத் தவிர வேறெதுவுமாகுமெனக் கூறமுடியாது. இலக்கியங்களில் கண்ட பழஞ்சொற்கள் இங்கு சகஜமாக வழக்கத்திலிருந்து வருகின்றன. உதாரணமாக பூழி, புழுதி போத்து (எருமைக்கடா) வெட்டுதல் (அடித்தல்) சூரல் (பிரம்பு) என்ற சொற்களை எடுத்துக்கொள்ளலாம். போத்து என்ற பதம் மரபியலில் தொல்காப்பியராலும், சவட்டுதல் என்ற பதம் பதிற்றுப் பற்றிலும் காணப்படுகிறது. இங்குள்ள முக்கியமான விழாக்களும், பழக்க ஒழுக்கங்களும், தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டனவாக இருக்கின்றன. நமது தீபாவளிப்பண்டிகைக்குமேல் பன்மடங்கு சிறப்புடன் மலையாளிகளால் கொண்டாடப்படும் ஓண விழா விஷ்ணுவிற்காகக் கொண்டாடப்படும். இதுவே பத்துப்பாட்டில் மயோன் விழா என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாவை நோன்பும் அங்கு கொண்டாடப்படுகிறது. இவற்றால் மலையாளம் தமிழ்நாடென்பது வெட்டவெளிச்சமாகி விட்டது. மேற்குக் கடற்கரையை அடுத்த திருவஞ்சைக்களத்திலிருந்த சேரமான் பெருமாள் நாயனருக்குச் சிவபெருமான் பாணபத்திரனுக்குப் பொன் கொடுக்குமாறு 'மதிமலி புவிசை' என்று எழுதிய திருமுகப்பாசுரமும், குலசேகர ஆழ்வார் பாசுரங்களும் தமிழே என்பதை யாவருமறிவர். சுந்தரமூர்த்திநாயனுர் காலத்துக்குப்பின் இந்நாடு மலையாளமென்று புதுப்பெயர் பெற்றது. மலையாளமொழிக்குத தமிழ் எழுத்துக்களினின்று சிறிது வேறுபட புதிதாக எழுத்துக்கள் வகுத்தவர் 300 ஆண்டுகட்கு முன்னிருந்த எழுத்தச்சன் என்பாரே. பச்சைமலையாளமென்பது தனி (சுத்த) மலையாளம் பச்சைமலையாளக் காவியமொன்று ராமசரிதமாகும். அதிலுள்ள அடியிற்கண்ட பாடல் ஸ்ரீமான் கோபிநாதராயரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது—

உரைத்தது கேட்டநேரம் உயிர்பிறந்தவரைப் போல
கருத்து கேடடயணுகிய கண்புனல் சொரிந்து
குருத்தத (ச)ந்தாயத்தோடே கொடுப்பமப்பொழுது கைவிட்டு
அரக்கர் கோனுடலமொக்கெயவ (லை)க்கு மாதலகில் வீழ்ந்தான்.

இதில் இரண்டொரு வடமொழிச்சொற்களைத் தவிர ஏனைய சொற்களெல்லாம் தனித்தமிழா யிருப்பதனையும் மலையாளிகள் தங்களைத் தமிழைவிட்டுப் பிரிந்து வேறுபட்டவராக நினைப்பதும் போனதும் வருந்தத் தக்கதாகும். அவர்களை இங்ஙனஞ் செய்தது வடமொழிப் பயிற்சி மிகுதியாயினமைபோலும்!

வடமேற்குத் திசையில் நிகழ்ந்த மாறுதலைக் கவனிப்பாம், மலைப்படுகடாம் என்னும் தமிழ்ப்பாட்டுக்குத் தலைவனுகிய நன்னன் தநதை நண்ணன் ஆண்ட பூமி நாடாகிய கொடுந்தமிழ் நாடும் தமிழ் வழக்கமிருந்த எருமை நாடாகிய மைசூர் பகுதியும் கன்னடம் துளுவம் முதலிய வேறு பாஷைகள் வழங்கும் வேறு நிலமாக மாறின. வடவேங்கடத்தைச் சூழ இருக்கும் சித்தூர் வேலூர் முதலிய இடங்களிலும் ஆந்திரபாஷை வழங்கும் நாடாகமாறிவிட்டன.

உலகியல் விடயங்களை உணரவேண்டுமானல் விவேகபாநுவைப் படியுங்கள்!

தமிழ்நாட்டின்கீழ் எல்லைக்குத்தான் ஊறு நேராதிருந்ததா எனப்பார்ப்போம். அந்தோ! அதுவுமில்லை, தெமொடிக்கிள்ளி காலத்தில் இந்திரவிழா கொண்டாடப் படாததற்காக கடல் கோபித்தெழுந்து பல சிறப்பும் வாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்தையும் கொண்டது. இச்சென்னைமாநகரம் அப்பட்டினத்திற்கு எவ்விதத்தாலும் கால்கூறு கூறப்படாதென மொழிந்தால் அதன் சிறப்பை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். இத்தகை சீர்வனம் பொருந்திய நகரைத் தமிழகம் இழந்தது. இது தமிழராகிய நம்மவர் துர்அதிர்ஷ்டவசமே யாகும்.

இவற்றை எல்லாம் நோக்குமிடத்து பண்டைத் தமிழகத்தின் எல்லை நாற்புறத்தும் காளடைவில் கடலாலும் பிறமொழிகளாலும் ஏற்பட்ட மாறுதல்களால் நமது பண்டைத் தமிழ்நாடு தன்னளவிற் சுருங்கிவிட்டதெனத் தெரியவரும். பழைய அகச்சிரே குறைந்து நிற்கும் தமிழகமே! நின்நிலையைக் குறித்து வருத்தமுறுத நின்மக்கள் எவரேனு மிருப்பரோ?

பழந் தமிழ் மக்கள்

தொன்றுதொட்டே தமிழகத்தில் பிறந்து தமிழைத் தாய் மொழியாகப் போற்றிவந்த உரிமை பெற்றவர்கள் யாரோ அவர்களே தமிழ் மக்களெனப்படுவர். தற்பொழுதே எனில் தமிழ் மக்கள் என்றபெயரைக் கேட்காமல் திராவிடர்என்று வழங்குகிறது. ஸர்வகலாசங்கத்தார் அனுப்பிய கடிதத்திலும் பேசும் விஷயம் திராவிடர் சம்பந்தமான விஷயமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். திராவிடரென்றபெயரே திரிந்து தமிழரென வந்ததென்றும், திராவிடர் என்ற சொல்லுக்கு ஓடிவந்தவர் என்பது பொருளெனவும், வடக்கிழ் நாடுகளிலிருந்துவந்து இங்குமங்கும் ஓடிக் குடியேறி யிருந்ததை நோக்கி இவர்கட்கு இப்பெயர் வந்ததெனவும் கூறுவர்.

தற்காலம் தமிழ் அளித்த அகத்தியர்

தமிழர் நாடோடிகளாய்த் தமிழகத்திற்கு வந்தார்கள் என்ற கொள்கை ஸ்திரமாக நாட்டப்படுமேயின் திராவிடர் என்பது அவர்கட்குப் பொருந்தும். அங்ஙனம் பொருந்துமாயினும் திராவிடர் என்றபதமே திரிந்து தமிழரென வந்ததென்று சொல்லுவது சற்றும் பொருந்தாது. திராவிடர் என்பது தமிழர் தங்களுக்கு இட்ட பெயரன்று. இப்பெயர் தமிழ் தொன்னூல்களில் காணப்படுவதுமன்று. தமிழளித்த அகத்தியரென்றே போற்றத் தகுந்த மகா மகோபாத்தியாய சாமிநாத ஐயரைப்போன்ற சங்க நூல்களைத் துருவித்துருவி ஆராய்ந்தறிந்த பெரியோர்கள் திராவிடர் என்ற பெயர் சங்கநூல்களில் இருப்பதாகக் கூறவுமில்லை. அப்பெரியோர் போன்றோர் இருப்பதாகக்கூறினால் ஒருவேளை நாம் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கும். ஆரிய தமிழர் என உச்சரிக்கும் முயற்சி மிகுதிபற்றித் தங்கள் நாவின் இயற்கைக்குத் தகுந்தபடி தமிழரைத் தங்களுக்குள் அழைத்த பெயராக "திராவிடர்" என்ற பதம் ஒருவேளை இருக்கலாம். தமிழர் தொன்றுதொட்டே தமிழ் நாட்டிற்குரியவரா அன்றி வேற்று நாட்டிலிருந்து புதிதாகத் தமிழகம் புகுந்தவரா என ஆராய்வோம்.

(தொடரும்) சு.மி.

:: ஆசாரக் கோவை ::

நன்னிலம்-திருவாளர்

பா. பக்கிரிசாமி செட்டியார் எழுதுவது

உலகத்தில் ஒவ்வொரு தேசத்தினரும் தங்கள் தங்களது முன்னோர்களின் சரிதங்களையும், அவர்களால் அருளப்பட்ட நூல்களின் பொருள் நுட்பங்களையும் அறிய ஆசிக்கின்றனர். ஒரு நாடு முன்னேற்றமுற வேண்டுமானால் அந்நாட்டின் ஆதிமக்களுடைய வரலாற்றை உணரவேண்டியது இன்றியமையாதது. நம் முன்னையோர் பண்டு எத்தகைய நிலைமையிலிருந்தனர். அவர்களின் பண்பென்ன என்பனவற்றை அக்காலத்து பேரருட் புலமை வாய்ந்த பெரியார் பலர் இயற்றிய நூல்களை ஆராய்ச்சி செய்வதால் தெரிந்துகொள்ளலாம். ஆகலின், ஆசாரக் கோவை யெனும் அரிய சிறிய நூலை இது காலை ஆராய்வோம்.

கடைச் சங்கக் குறிப்பு

தலை, இடை, கடை என்ற முச்சங்கங்களிலே கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த சான்றோர்கள் சிறுமேதாவியார், சேந்தன் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார். இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மருதனிள நாகனார், கணக்காயனார் மகனார், நக்கீரனார் முதலிய நாற்பத்தொன்பதின்மர். அவர் உள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை. பேரிசை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்ற இத்தொடக்கத்தன. பழைய நூல்களை மேற்கணக்கெனவும், கீழ்க்கணக்கெனவும் வகுத்து கீழ்க்கண்டவாறு இலக்கண மியம்புகின்றனர்.

"மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே
மேற் கணக்கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர்கொளலே
அகவலுங் கலிப்பாவும் பரிபாடலும்
பதிற்றைந்த"தி பதிற்றைம்பதிரு
மிருத்துடன் றொகுப்பன மேற்கணக்கெனவும்

அரசியல் விடயங்களை அறியவேண்டுமானால் விவேக பாநுவை வாசியுங்கள்!
மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கென்னவுங் கொளலே
ஐம்பது முதலா வைந்நூ றீறு
மையவகைப்பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக்காகும்
அடிநிமிர் வில்லாச் செய்யுட்டொகுதி
அறம்பொரு ளின்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்."

(பன்னிரு பாட்டியல்)

கீழ்க் கணக்கு

இனி கீழ்க்கணக்கு நூல்களா (அடிவரையறையில் சிறுமையை உடையவை) அவை நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியது நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஐந்திணையம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன, இதற்கு மேற்கோள்,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகம் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலை சொற்காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்பதாகும். இவ்வெண்பாவிலுள்ள "ஐந்திணை" என்பதன்முன் 'நல்' கூட்டி, நாலைந்திணை யெனக் கொள்ளல் வேண்டும், இன்னிலை என்ற விடத்து வேறு பாடமோதிக் கைந்நிலையை ஒன்றாகச்சேர்த்துக் கூறவோரும், ஐந்திணை என்பது திணைகளைப்பற்றிச் சொல்லும் ஐந்துவித நூல்கள்; ஐந்திணையைம்பது முதலிய நான்கு நூல்களையும் போன்றது இன்னும் ஒன்று இருத்தல் வேண்டுமென்றும், இன்னும் பிறவாறும் உரைப்பாருமுளர். ஆனால் கீழ்க்கணக்கைப் பதினெட்டாகச் சரிவரக் காட்டுதற்பொருட்டு ஐந்திணை நூலகள் ஐந்தென்று கூறுதற்குத் தக்க ஆதாரமொன்றும இதுகாறும் கிடைத்திலது. நிற்க, இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இதுவரையில அச்சியந்திரமேறுதன ஐந்திணை நூல்கள் நான்கும், இன்னிலையுமேயாகும. பிறவற்றில் சில ஒவ்வொரு முறையும், ஏனைய பற்பல தடவையும் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் ஆசாரக் கோவை என்ற நாம எடுத்துக் கொண்ட நூல் மும்முறை அச்சுக்கூடம் புகுந்திருக்கின்றது.

ஆசாரக் கோவை

ஆசாரக் கோவை என்பது உலகத்திற்கு அவசியமான ஆசாரம் (ஒழுக்கங் களை (ஒழுக்கம விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றார் திரு

வள்ளுவனார்) தொகுத்துக்கூறும் நூலென விரியும். இஃது நூறு வெண்பாக்களாகிய ஒரு சிறுநூல்,

"ஆரெயில் மூன்று மழித்தானடி யேத்தி
யாரிடத்துத் தானறிந்த மாத்திரையா னாசாரம்
யாருமறிவ தறமாக மற்றவற்றை
யாசாரக் கோவையெனத் தொகுத்தான் றீராத்
திருவாயி லாயதிறல் வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளி யென்பான்"

என்ற தற் சிறப்புப் பாயிரத்தால் ஆசாரக் கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் எனும் புலவர் பெருந்தகை யென்றும், அவர் பிறந்ததால் பெருமை யுற்றது வண்கயத்தூர் என்ற வளம்பதியென்றும் தெள்ளிதற்புலனாகின்றது. ஆசாரக் கோவைக்கோர் உரையுமிருக்கின்றது. அதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் செய்தனரென்பர். ஆனால் ஆதாரமில்லை,

உள்ளுறை

ஏனைய தமிழ்நூல்களெல்லாம் ஆசாரத்தை ஒழுக்கமெனப் பொதுப்படவே கூற இவ்வாசாரக்கோவையொன்றே அதனைச் சிறப்பு வகையாற் உரைக்கின்றது. இந்நூல் உண்ணல் முறை, உடுத்தும் விதம், நீராடும் நெறி, உறங்கல், மலஜலம் கழித்தல், வாய்பூசுதல் முதலிய நித்திய கருமங்களைப்பற்றியும், ஐம்முது குரவர்பால் ஒழுகும்விதம், இல்வாழ்க்கையை இனிது நடத்தும்வழி, இவைகளைப்பற்றியும், வரைவின் மகளிர், சூது, கள், சிற்றினம் கடியுமாறும் பத்தழகு பெற்று பண்புடன் கூறுகின்றது.

இதுகூறும் எச்சில்வகை நீராடுமுறைமை, மலஜல மோசன விதிகள் முதலியன. இற்றை நாளுக்கு முற்றும் ஏற்புடையன வல்லாததோடு, பார்ப்பனச்சிறப்பு மிகவும் வெறுக்கத்தக்கது.

ஆனால் இந்த நூல் நம் தாய்மொழியாம், தெய்வத் தமிழ் மொழியாலாக்கப் பட்டு தமிழிலும் சங்கத்தமிழாக, ஆயிரம் ஆண்டுகட்கு முன் தமிழ் நாட்டின் ஒழுக்கம் எவ்வாறு இருந்ததென்பதற்கு ஆதாரமாய், அரிய சுகாதார விதிகள் சில அறிந்துகொள்ளற் கேதுவாயிருப்பதால் போற்றற்குரியதுமாகும். இவையனைத்தையும் மறப்பினும், ஆக்கமுள்ள எறும்பானது ஆகாரம் கிடைக்காதகாலத்தில் உதவியாகும்படி கிடைக்கின்ற உணவை சேகரித்து வைத்துக்கொள்ளும். தூக்கணம் பறவையானது, குளிர்காற்று முதலியவற்றில் நின்றும் தன்னைக் காக்கும்படி கூடு கட்டிக்கொள்ளும். காக்கையானது தன்னினத்தை அழைத்தழைத்து அவைகளுடனே தனக்குக்கிடைத்த உணவை உண்ணும். இங்ஙனமாக இவைகளின் செய்கையை அனுசரித்து கிடைக்காத காலத்தில் உதவ கிடைத்த காலத்தில் உண

விற்கு உரியவற்றை சேர்த்தலும், குளிர் காற்று முதலிய வற்றால் இடையூறு உறுவனையாக இல்லயியற்றிக்கொள்ளுதலும், சுற்றத்தார் சுற்றப்பட உண்பதும் ஆகிய இக்கருமங்களைக் கைக்கொள்வார்க்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எவ்விதத்திலும் சித்தியாகும் என்ற விரிவுரையுடைய,

"நற்றெறும்பு தூங்கணம் புட்காக்கை யென்றிவைபோல்
தங்கரும நல்லகடைப் பிடித்துத் — தங்கருமம்
அப்பெற் றியாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும்."

என்ற இவ்வொரு செய்யுளைக் கருதியாவது இந்நூலைக் கொண்டாடல் வேண்டும்.

பொருள் சேர்க்கும் வழி

"கல்வியும் செல்வமும் நல்வினைப்பயனே" என்றார் ஓர் அறிஞர். வித்தைக் கற்பித்தல் வைத்தொழில், கமத்தொழில் முதலியவற்றாலும் வியாபாரத்திலும் பொருள் சேர்க்கலாம். "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்றார் பாட்டியார். அரசசேவைசெய்து அநியாயமானபொருள் சம்பாதித்தோர் பாட்டைவிட்டு, தற்காலத்திலே சுயாதீன உத்தியோகஸ்தர் எனக்கூறும் நியாயதுரந்தரர் நொத்தாரிஸ்மாரிற்பலர் பேர்மாத்திரமே யுடையாராய் கடன்காரராய் நித்திய தரித்திரராய்த் திரிதல் மிகவிசனமே. உத்தியோகம் புருஷ லட்சணம் எனக்கூறும் அரசசேவை செய்யும் வாலிபரிற்பலர் வரவுக்குமிஞ்சிய செலவுசெய்து, பெரிய கடன்காரராய் பெரிய பகல்வேஷக்காரராய் காலம் போக்குகின்றார். எவ்வளவு வந்தும் சம்பாதித்தும் எல்லாம் செலவேயாகி ஒரு சல்லி சேர்ப்பதற்கும் கஷ்டமாய் முட்டுப்பட்டிருப்பவரே பெருந்தொகையினர் எனலாம். இவர் ஒழுங்காக வேலைசெய்யின் உபகாரநிதி பெறலாம் என்ற ஒருதுணிவுண்டுதான். மற்றையோர் நிலையைப்பற்றி ஆராய்வாம், வரவு வந்துகொண்டிருக்கும் இக்காலத்திலே மிச்சம் சேர்க்காத இவரெல்லாம் சுருங்குங்காலத்திலே எவ்வாறு காலங்கழிப்பரோ? பசிக்கும் வயிற்றுக்கு வழி எப்படியோ? இனி நோயும் பாயுமானால் சீசீ என்று அருவருக்குங் காலத்திலே சல்லி சற்றே ஆறுதல் செய்யுமன்றோ? கையிலே நாலுபணம் சேர்ந்திருந்தால் அது என்றைக்கும் தைரியமாய் மனதைத் திடப்படுத்தித் தேற்றுமன்றோ? பெண்டிரும் பிள்ளைகளும், மற்றைய சுற்றத்தவர்களும் எல்லாரும் கையில் சல்லி இருந்தால் தானே பணக்காரனொருவன் எச்சில்செய்து குடித்த பாத்திரத்தையும் எச்சில் என்று எண்ணார். ஆனால் பணம் சேர்த்து வைக்காத ஏழை யொருவன் தொட்ட பாத்திரத்தையோ தண்ணீரில் அவசியம் கழுவித்தான் எடுப்பார்கள். சல்லி இல்லானை மதிப்பவர் யார்? வாவென்று அழைப்பவர் யார்? சற்றே யோசியுங்கள்! பின்னுக்கென்று சற்றே மிச்சம் தேடிவைக்கப் பாருங்கள்! பாருங்கள்!!

(சோதிடபரிபாலினி)

நமது நீதிக் கதைப் பகுதி

குடியாத்தம் 'சேஷவிலாஸ்' தமிழாசிரியன்,

லால்குடி - சே. கந்தசாமி எழுதுவது

அலமேலு மூட்டிய அவியா நெருப்பு

(உரிமை ஆசிரியனுக்கு உரியது)

(முன் தொடர்ச்சி)

அப்படிக் கலங்கின நான் கொஞ்ச சிரமத்துடன் சமயோசித புத்திகொண்டு, தேரி, ஒருக்களிக்கப்பட்டிருந்த சாளரத்தை நன்றாகத் திறந்து உள்ளே உன்னிப் பார்த்தேன். அங்கே எனக்குத் தெரிந்த காக்ஷியில் நான் யாரைப்பற்றி இவ்வளவுநேரம் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேனோ—எவரைப்பார்த்து ஒரு வார்த்தையை ஞாபகப்படுத்த வேண்டுமென்று வேகமாய் ஓடி வந்தேனோ—அந்தப் பாவையே முக்கிய பாத்திரமா யிருந்தபடியினால், அக்காக்ஷி என் ஆத்திரத்தைக் கிளப்பக் கூடியதாயிருந்தது.

பலகணியி னூடே பார்த்த என் கண்களுக்குத் தெரிந்த அப்பரிதாபகரமான காக்ஷியை இப்போது நினைவிற்குக் கொண்டுவந்தாலும் என் மனம் 'பஹீர்' என்று நடுங்குகிறது. இறப்பினும் மறக்கமுடியாத அது எந்தக் காக்ஷியா யிருக்குமோ வென்றறிய உங்களில் பலர் ஆவலுள்ளவர்களா யிருப்பீர்களாகையினால், பிறக்கும் வருத்தத்தை அடக்கிக்கொண்டு உங்களுக்கு நான் வெளியிடக் கடமைப்பட்டவனா யிருக்கிறேன். துக்கப் போக்குமடையாக இக்கதையை எழுத முன்வந்தேனாலும், இதைப்பற்றி எழுதும்போது மனமூங் கண்களும் அழுகின்றன; என் எழுத்துப் பிரதியைப் பார்க்க நேருகிறவர்களுக்கு, இவ்விடத்தில் என் கண்ணீர் சொட்டி யிருப்பதுவும், எழுத்துக்கள் மறைக்கப்பட்டிருப்பதுவும் தெரியாமற் போகாது. ஆணோடு பெண்ணோடு பிறக்காதவர்களையும் கலக்கும் அக்காக்ஷி, பிள்ளைக்குட்டிகளைப் பெற்று, எடுத்து, வளர்த்து அருமையை அறிந்த உத்தமர்களாகிய உங்களைக் கலக்கிவிடும் என்று நான் மனப்பூர்த்தியாய் நம்புகிறேன். ஆகையினால், அவ்வருத்தத்தின் மிகுதிப்பாட்டால் கதையை நிறுத்திவிடாமற் பொறுமையுடன் படித்து, முடிசது ஆராயவேண்டுமாய் மிகுதியும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எந்தச் செந்தாமரைபோன்ற திவ்ய கரத்தை எனக்குக் கொடுப்பதாக அலமு தீர்மானித்திருந்தாளோ அவ்வொப்பற்ற வலது கை ஒரு வலிய கயிற்றால் கட்டப்பட்டிருந்தது. என் மனமும், அவள் மனமும் எப்படி பதைத்துக்கொண்டிருந்தனவோ அவ்வாறு எரிந்து தனி உறவு கொண்டாடின ஒரு 'குமட்டி' (இரும்படுப்பு) தொங்கிக்கொண்டிருந்த அலமுவின் இடக்காலுக்கு ஒரு முழம் கீழே வைக்கப்பட்டிருந்தது. அக்காக்ஷியைக் கண்டவுடன் என்னுயிர் எவ்வாறு தத்தளித்ததோ அதைப்போலத் தத்தளித்துக்கொண்டிருந்த அலமேலுவை ஒரு மூலையில் கொண்டிருந்த கயிறு விட்டத்திலிருந்த வளையத்தில் மாட்டப்பட்டு, பக்கத்திலிருந்த அறையின் நா(ய்)தாங்கியில் இறுக்கிக் கட்டப்பட்டிருந்தது. அச்சித்திர வதைக்கு ஆளான அலமுவின் சுந்தரமான உடம்பு, அந்தச் சமயத்தில், ஒரு துணியினாலும் மறைக்கப்பட்டிருக்கவில்லை என்று நான் சொல்லுவதால் நீங்கள் வேறு விதமாய் என்னை எண்ணுதிருப்பதுடன், நடந்ததை நடந்தவாறே நவிலும் என்னை வெறுத்துக் கொள்ளவும் கூடாது.

"என் கையினால் கங்கணம் கட்டப்படுமென்றிருந்த அலர்மேலு, தன் கையை நிமிஷத்திற்கு நிமிஷம் அறுத்துக்கொண்டிருந்த அம் மணிக்கயிறு கட்டப்பட்டபோது எப்படி வருந்தினளோ?" என்று நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது, சுமார் 35-வயது மதிக்கத்தக்க ஒரு ஸ்திரி, விசிறியுங் கையுமாய் அவ்விடம் உதயமாகி, அலமுவின் அடித்தொடையைப் பார்த்து ஐந்தாறு அடிகள் ஓங்கி அடித்தாள். அந்த அடிகள் என்மேலேயே விழுந்தாற்போலிருந்தது; என் அலமு எப்படித் தவித்திருப்பாளோ தெரியாது. மகா பாபியும் கொடிய நீலியுமான அன்னவள் யார் என்று உற்றுப் பார்த்து, அலமுவின் அன்னை என்று அறிந்ததும் என்னுடைய அல்லல் இன்னும் அதிகரித்தது. 'ஸ்திரி ஜன்மம் படைத்தவர்களில் கன்னெஞ்சம் படைத்த ராக்ஷசிகள் கூட தமது சக்களத்தி மக்களை அவ்வளவு கொடிய தண்டனைக்கு உள்ளாக்கமாட்டார்களே; இவள் எப்பேர்ப்பட்ட கிராதகியாய் இருக்க வேண்டும்; 'ஏ தாய் என்னும் பெயர்பெற்ற பேயே! உன் கண்ணேடாதோ? மகள் உயிரோடிடர் காணுதோ? நீ புண்ணேடோடும் கனலோ? விடமோ? பெண்ணோ? தீயோ? மாயாப் பேயோ? புகழோடுயிரைச் சிடுவெம் தீயோய்! உன் செயல் என்னே! நின் போல் தீயார் உளரோ?" என்று எண்ணினேன். அவ்வீட்டில் அவ்விருவரைத் தவிர வேறொருவருமில்லாத படியினாலும், தன் கை விசிறிக் கட்டையினால் கொடுக்கப்படும் அடிகளும், 'குமட்டி'யின் அனலும் அவளுக்கு அதிக ஹிம்ஸையை உண்டாக்கிப் பலவந்தமாய்த் தன்னிஷ்டப்படி நடக்கச் செய்யவேண்டுமென்று அக் கொடிய தாய் கருதியிருந்தாளானபடியினாலுமே தான் அவள் அலமுவைப் பிறந்த மேனியாய் விட்டிருந்தாள் போலும்!

தன் அடிகளைத் தாங்கமாட்டாது, ஐயோ! ஐயோ! என்று கத்தாமல், எல்லாம் எம்பிரான் அருள் என்றுன்னும் அலமேலு, 'ராமா! ராமா!!' என்று ஓலமிட்டதைக்கண்டு அவளது தாய் பின்னும் சீறி, "அடியே! உன் கொழுப்பு இன்னும் அடங்கவில்லை போலிருக்கிறது; உன் திரேகத்தில் இந்த உதிரமிருக்கிறவரையில் உன் திமிர் அடங்கப் போகின்றதில்லை; தெருவில் போகிறவர்களை எல்லாம் கண்களால் மயக்கித் தன் வலையில் சிக்கவைக்கும் சண்டாளனாகிய அந்தக் கந்தனும் உன்னை விடப்போகிறதில்லை; இந்த இரவுக்குள் உன் சோரியைச் சுண்டச்செய்து, கண்டவளவில் அவனும் காரித்துப்பும்படி செய்துவிடுகிறேன் பார்!" எனத் தன் கடுமொழிகளைக் கொட்டினாள்.

அப்போது அலமேலு. "அம்மா! என்னைப் பெற்றெடுத்து வளர்த்த உமதுமனம் நோகும்படி நடக்கவேண்டியிருப்பதற்காக நான் வருந்துகிறேனாயினும் என் மனத்தை ஏற்கனவே மனச்சாக்ஷியாய் ஒருவருக்குத் தத்தம் செய்யப்பட்ட என் மனத்தை மாற்றுவது முடியாதென்றே உறுதியாக இன்னும் உரைக்கின்றேன்; எப்போது அம்மஹானுபாவரை மனதால் ஸ்மரித்தேனோ? எந்த நிமிஷத்தில் என்கன்னி மனத்தில் வாழ்ந்திருக்க அவருக்கு இடம் ஈந்தேனோ அப்போதே, அவர் என்னை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நான் அவருக்கு அடிமைப்பட்டு விட்டேன்; எனக்குப் பலவிதங்களிலும் யஜமானராகிய அவ்வுத்தமரை இழித்துப் பேசுவதனால் என் மனம் கரைந்து விடப்போகின்றதில்லை; எனக்கு எல்லாம் அவரே;'' என்று தைரியமாய்ச் சொல்லி முடித்தாள்.

அலமேலுவின் மாசற்ற கன்னி மனம் என்மேலேயே நாட்டமாயிருப்பதைக் கண்ட அவளது அன்னை, 'நெட்டிருப்புக் கோல் பஞ்சில் பாயாததுபோல் வெட்டென உள்ள என் அதட்டல் மிரட்டலுக்கெல்லாம் இவள் மசிகின்றவளாகத் தெரியவில்லை; இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்கொலாலென்றும் மகிழாது ஆகையினால் நயமாகப் பேசி இவள் மனத்தை மாற்றவேண்டும்;'' என்று கருதிச் சிறிதுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். பிறகு மெதுவாக எழுந்திருந்து, அலமேலுவின் அருகு அடைந்து, 'அலமு! புஷ்பத்தைப் போலும் மிருதுவான சரீரத்தையுடைய நீ, இன்னும் வாய் திறவாமல் தண்டனையைப் பொறுத்துக்கொண்டிருப்பது ஒரு விதத்தில் என் மனதைக் கலக்குகின்றது; ஆயினும் மகளே! உன்னை நல்ல ஸ்திதியில் காணவே ஆசைப்படும் தாயான என் வார்த்தைகளைக் கேள்; பாலியச் சேஷ்டையினால், மேல் வரும் கஷ்டங்களைக் கருதாது, பெற்றோரின் உத்திரவு இன்றி, நீயாக உன்னை ஒருவருக்குத் தத்தம் செய்துகொண்டது விரும்பத்தக்கதும், யோக்கியமானதும், பொறுக்கக்கூடியதுமல்ல; 'கடலுலகில் வாழும் உயிர் எழுபிறப்பினுள் மிக்கக் காட்சிபெறு நரசென்மமாய்ப் பிறத்தலரிது; அதிலும் உயர்சாதியில் கற்புவழி வருதலரிது; வடி-

வழூட்டணவயவங் குறையாது பிழையாது வருதலது தனினுமரிது; வந்தாலும் இது புண்யம் இதுபாவம் என்றெண்ணி மாசில்வழி நிற்றலரிது; நெடிய தனவானாதல் அரிது; அதிலும் இரக்கமுள்ள நெஞ்சனானாதலரிது; நேசமுடன் ஈசன்பதத் தன்பனாய் வருதல் இந்நிலத்தி லது தனினும் அரிது;' என்று சொல்லுவார்கள். சேலத்து பிள்ளையாண்டான் மேற்கூறிய ஒன்றிலும் குறைந்தவனல்ல; அப்படி யிருக்க நீ ஏன் அவனை வெறுக்கவேண்டும்? பெண்ணுதவுங்காலை பிதா விரும்பும் வித்தைக்குச் சிறந்தவனாய் அவன் M. A. L. T. பரீக்ஷையில் இவ்விராஜ்யத்தில் முதலில் தேறி பரிசுபெற்று, நம்மூருக்குப் பக்கத்திலேயே ரூபா-250-உத்தியோகம் செய்து வருகிறான்; ஈன்ற தாய் எண்ணில் தனம் விரும்பும்; அதற்கும் அவன் பின்னடையாதான்; கூரிய நற்சுற்றம் விரும்பும் மாசறு குலத்து வந்தவன்; காந்தனது பேரழகைக்காண உன்னிரண்டு கண்களும் போதாதே; அப்படி யிருக்கக் காலில் தட்டுப்படும் தங்கக் கட்டியை உதைத்துத் தள்ளிவிடுவதுபோல் நீ ஏன் அவ்விடத்தை வெறுக்கின்றாய்; மெத்தைகள் தைத்த நாற்காலிகள், பெஞ்சிகள் முதலான சோபாக்களில், மின்சார விசிறிக் கடியில், இருபுரங்களிலும் பல வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் சூழ்ந்திருக்க இனிது வீற்றிருக்கும் அந்தச் சேலத்தார், நீ காலாலிட்ட வேலையைத் தலையாலே செய்யச் சமயம்பார்த்து கார்த்திருக்கும் பெரும் பாக்கியத்தை அலக்ஷியமாய் உதறிவிட்டு, கந்தனை விரும்பிய உன் மதியீனத்தை என்னவென்று உரைப்பேன்? அந்தக் கந்தன் ஆறாவது பாரம் வரையில் படித்து, அரை வயிற்றுக்குக்கூடச் சாப்பிடாத பரம தரித்திரன்; எனக்கு நினைவு தெரிந்த நாள்முதல் தரித்திரக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் அவனைக் கல்யாணம் செய்துகொள்வதால், நீ, என்ன நன்மையை அடையப்போகின்றாய்? நாடிவந்த வாயுவையும் அக்கினியையும் அவமானப்படுத்தும் சக்தியுள்ளதும், சூரிய சந்திரர் வாசம் செய்யப் பெற்றதுமான அவனது வீட்டில் எங்கே எப்படியிருந்து நீ காலங்கழிப்பாயோ என்று கருதுங்கால், என்னால் கலங்காமலிருக்க இயலவில்லை; தானே அரைவயிற்றுச் சோற்றுக்குத் திண்டாடும்போது அவன் உனக்கும், உன் வழிக்கும், எவ்வாறு சம்பாதித்துப் போடப்போகிறான்? ஐயோ! வேளா வேளைக்குச் சாப்பாடில்லாமல் நீ இளைத்துக் கருத்து அழகிழந்து ஒழிந்து போகப் போகிறாயோ? கண்மணி! நாங்கள் சொல்லுகிறபடி நீ சேலத்தாருக்கு வாழ்க்கைத் துணைவியாய் ஆகிறபக்ஷத்தில் உனக்குச் சகல சௌபாக்கியங்களும் கிட்டுவதுடன்கூட, நாங்களும் அடிக்கடி வந்து உன் க்ஷேமலாபங்களை விசாரித்து இன்புறும் பாக்கியம் படைத்தவர்களாவோம். அப்படிக்கில்லாமல் அவ்வஷ்ட தரித்திரனை சேலத்தார் படிப்புக்கு உரைபோடக் காணாத படிப்புடன் கூடிய அவ்வறிவிலியை நம்முடைய கால்தூசிக்கும் சமமாகாத அவ்விபசாரனை நீ மணம் செய்து கொண்டால் அவ்வீட்டுக்கு வந்து உன்னைப் பார்த்துப் போவதற்கும் எங்களுக்கு முகமில்லாமற் போய்விடும்; மகளே!

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சோல் ஆற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினா லடித்துத்தீய
பந்தமும் இடேவர் எல்லாம் பார்த்திடில் அருளே ஆகும்
இந்நீர் முறைமையன்றோ ஈசனார் முனிவும் என்றும்"

என்று பெரியோர்கள் தீட்டி யிருக்கிறபடியால், இத்தண்டனையைக் கொடும் செய்கை என்றுன்னாது, வந்த ஜட்ஜை அனுப்ப இரயிலடிக்குச் சென்றிருக்கும் உன் தந்தை திரும்பி வருவதற்குள்ளாக உன் மனத்தை மாற்றிவிடு; அணங்கினுக் கணங்கு செய்யும் உன் அழகைக் குறித்து கேள்விப்பட்ட, நம்மிலும் எவ்வளவோ பங்குயர்ந்த அவர்கள் நம்மிலும் உயர்ந்தவர்கள் எத்தனையோபேரிருக்க அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு, நீ வதியுமிடத்தைத் தேடிப்போந்து உன்னை விரும்பும்படி நேரிட நீ முன்னம் அருந்தவம் இயற்றி இருக்கவேண்டும்; ஆகையினால் அவர்களுக்கு இயைவதே ஏற்ற முறைமை; திரும்பிவரும் தந்தையின் மனமகிழ நீ, 'நான் சேலம் ஜட்ஜு வீட்டில் வாழ்க்கைப்படுகின்றேன்' என்று மனமாறக் கூறுவாயேல் நாங்கள் உன்னைப்பெற்ற பலனை அடைவோம்; நீயும் இத்தண்டனையினின்றும் விடுபடுவாய்;' என்று கூறினாள்.

அவ்வாறு அவள் கூறிய மாற்றங்களை சோரும் மன்றலங்குழலினாள் இருசெவி வெதும்பக்கேட்டு, உளம் பதைப்ப வாடி, நெட்டுயிர்ப் போடும் தன் கண் பனிப்ப, அயல் நின்றாளை நோக்கி. "என் மனத்து என்றும் நீங்காதிருப்பவர் அம்மஹானேயன்றி மன்னர் வாழ்வுற்ற சேலமகனல்ல; சொன்னேன்; என் விழிக்கும் கண் வேறு காணாது; உங்களித்துணைத் துயருக்கும், ஆளாயுள்ள என்னுடம்பு உங்களால் கொடுக்கப்பட்ட தாகையினால்தான் என் மனம் நாடும் மணவாளருக்கு என்னைக் கொடுக்கத் தங்களை அநவரதமும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்; அம்மா! நான் சேலத்தாரைப்பற்றி ஏதும் குறைகூறவில்லை; நற்குலத்திலுதித்த அவரிடம் லட்சுமியும், சரஸ்வதியும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே; கொஞ்சம் கருத்தமேனி யுற்றவர் என் மனத்தவர் எனினும் என் முதற்பிரியப் பயிர் அவர்பால் நாட்டப்பட்டது; அந்நாற்று வளர்ந்து, வேரூன்றி, பூத்து, மணத்துக் காய்க்க ஆயத்தமா யிருப்பதால், இப்போததை வேருடன் எடுத்து இன்னுமொருதாவில் ஊன்றி வளர்த்துப் பலன் கொடுக்கச் செய்வது முடியாதகாரியமா யிருக்கிற தென்பதை நான் வாய்விட்டுக் கூறவும் வேண்டுமோ? அவர் தரித்திராயிருப்பதாற்றான் என் பிரியம் வெகு சீக்கிரமாகப் பரந்து ஊன்றியது; செல்வம் படைத்த இரு குடும்பம் ஒன்று சேர்ந்து கொழிப்பதிலும் செல்வர் ஏழையுடன் கூடி அவ்வேழைக் குடும்பத்தையும் முன்னுக்குக் கொண்டுவருவது நன்று என்று எனக்குத் தோன்றுகின்றது. அவருள்ள இடமே எனக்கு மோக்ஷம், அவருடன் புற்றரையிலிருப்பினும், குடிசைவீட்டிலிருப்பினும், மரத்தடியில் வாழினும் எற்கு மோக்ஷசாம் ராஜ்யத்தை ஆளும் இன்பத்தினை

உயர்ந்த ஆனந்த மூண்டாகும்; என் கணவர்க்குச் சந்தோஷத்தைத் தரக்கூடிய பற்பல வேலைகளையும் நானே செய்யக் காத்திருக்கிறேனாகையினால் வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் விரும்பவில்லை; கால் வயிற்றுக் கஞ்சியும் கிடைக்காமற்போகினும் அவருடைய மாசற்ற முகத் தேஜஸைக் கண்ணுலுண்டு பசியாற்றிருப்பேன்; முக்கியமான மனப் பொருத்தமில்லாத மணம் மணமற்றதாகையினால், தாங்கள் கொண்டுள்ள எண்ணத்தைத் தயவுசெய்து மாற்றி, இதுவரையிலும் வீண் திட்டுக்குப் பாத்திரமாயிருந்த அவருக்கே என்னை விவாஹம் செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பெரிதும் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்;

"ஆயுள் வரையில் ஒன்றாகூடி வாழ்வது பெண்ணும் பிள்ளையுமேயாகையினால், தம்மைப்போன்ற அறிவாளிகள், 'இது ஆயிரங்காலப் பயிர்' என்று கல்லியாணம் செய்துகொள்ளுகிறவர்களுடைய அபிப்பிராயத்தையும் கலந்து நடப்பது நியாயமல்லவா? அம்மா! இயற்கையாயுண்டாகும் பிரியம் காதல் மாவுப் பணியாரமல்ல. விண்டுக்காட்டுவதற்கு; வனத்தில் வசித்த சத்தியவானை மன்னன் மகள் சாவித்திரி விரும்பினாள்; நளாயனியோ கந்தமூலப் பலாதிகளைத் தின்னும் துறவியைக் காதலித்தாள்; என் ஆசையும், என்னிலும் பணத்தில் குறைந்த ஏழையை விரும்புவதால் பலனற்றதும் விரோதமானது மாகாது;—என் அம்மா! இனி என்னால் பேசவுமுடியவில்லை; கண்ணிருண்டு வருகிறது; காலம் குறுகினாற்போல் தோன்றுகின்றது; பாகதியினுக்குத் துணையைத் துதிக்கின்றேன்;" என்று இரக்கத்துடனும் தைரியத்துடன் சொல்லி,

[பாட்டு—"பித்தந்தெளிய மருந்து"—என்ற மெட்டு]

பல்லவி

"தாளையாத்தம் வாழும் அங்காளம்மைத்தாயே!
தாளைவந்தே யடைந்தேன்

அநுபல்லவி

வேளையிதுவாக வந்தென்னைக் காத்திடு
வந்தேன்! வந்தேன் வாரணி யன்னாய்! தா

சரணம்

தாரணி புகழும் தேவன் தர்மதுரை
சுற்றிக் கொண்டாடிடவே
வாரணி கொங்கையே வாகாயமர்ந்திட்டாய்
வந்து அடி பணிந்தேன்
காரணி! ஓங்காரி!; காலகாலன் பாரி!!!
கேசரி!!! காளியம்மே!!! கௌரி!
நாரணி! நிர்மலானந்த ரூபி! தேவி!!!
நான் பட்டேன்பாடு, காரும்! காரும்!!" தா

என்னும் பாட்டை வெகு சிரமத்துடன் பாடித்துதித்து முடித்தாள்.

அவள் பாடி முடிக்கும் வரையில் ஏதோ ஒரு பெரிய யோசனையிலிருந்த அவளது தாய் திடுக்கிட்டு எழுந்திருந்து, "நீ வழியாய்ச் சொன்னால் வழிக்கு வரமாட்டாய்; பாட ஆரம்பிக்கிறாயா? உன் கொழுப்பை அடக்காமல் போகிறதில்லை;" என்று சொல்லி ஆவேசம் கொண்டவளைப்போல், விசிறிக் கட்டையினால் பின்னும் 'படீர்' 'படீர்' என்று, கைக்கொண்டமட்டும் அடித்துக் குமிட்டியையும் நன்றாய் விசிறி, "பெண்ணே! வீணாகக் கெட்டுப்போகாதே! இன்னும் இறிது நேரம் கொடுக்கிறேன்: அதற்குள் உன் மனத்தை மாற்றி உன் தண்டனையினின்றும் தப்பித்துக்கொள்ளப் பிரயத்தனப்படு;" என்றும் சேர்த்துக் கொண்டாள்.

அந்த அடிகளை எல்லாம் பொறுமையுடன் பெற்றுக்கொண்ட அம்மடமங்கை, "அம்மா! தங்களுக்கு இவ்வீண் எண்ணம் வேண்டாம்; எத்தனை நேரம் கொடுத்தபோதிலும் என் மனத்தை மாற்றமுடியாது; அம்மா! உங்களிஷ்டப்படி நடவாத இந்தப்பாபியை ஏன் இன்னும் உயிருடன் வைத்திருக்கிறீர்கள்? குமிட்டியில் இன்னும் கரியைப்போட்டு விசிறி, என் துயரமான வாழ்வையும், உமது கெஞ்சுதலையும் முடிவுக்குக் கொண்டுவந்து விடுங்கள்! மனத்தை மாற்றிக் கற்பு இழப்பதிலும் நெருப்பில் மூழுகுவதே முடிந்த எண்ணம்" என்று புலம்பிக் கூறினாள்.

அந்த எமன் அவள் சொல்லியதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் அவ்வறையை விட்டகன்றாள்.

தனியாய் விடப்பட்ட அலமேலு தன் விதியை நொந்து பகவான் மேல் பாரத்தைப் போட்டு, 'ராமா! ராமா!' என்றபோது புலம்பின காக்ஷி என்னால் விவரிக்கத்தக்கதா யில்லை. அந்த நிமிஷத்திலேயே அவ்வீட்டிற்குள் புகுந்து, அந்த குணபாதகி தாயைத் தேடி நாடிக் கிழித்துத் தோரணங் கட்டியிருப்பேன். வாயிற்கதவு உட்பக்கம் தாளிடப்பட்டிருந்ததுடன் எனக்குப்பக்க பலமில்லாதிருந்தபடியாலும், அவ்வீட்டில் ஆண்மக்கள் அப்போதில்லாமையாலும் வருந்திப் பற்களைக் கடித்து, உதட்டை மடித்து, உருட்டிப் பார்த்து, பெருமூச்சு விட்டு, கைகளை நெறித்து, வலையிற்சிக்குண்ட யாளி தனக்கு வலை விரித்த வேடனைக் காணுங்கால் இருக்கும் நிலையை நான் அடைந்தேன். அலமுவும். மேலொன்றும சொல்லமாட்டாமல் சோர்ந்து வாடிய பூவைப் போலத் தொங்கிக்கொண்டிருந்தாள்.

(தொடரும்)

செவிக்கினிய செய்யுட்களைப் படிக்க விரும்பினால் விவேகபாநுவை மறவாதீர்கள்!

: மாதர் பகுதி :

(ஸ்ரீமதி-ஆர். இரங்கமணி அம்மாள் எழுதுவது)

இந்திய ஸ்திரீகளின் கடமை

தற்காலம் நம்மிந்து தேசத்திய பொருளாதார நிலைமையை கவனித்து அவ்விடயத்தில் நம் தேசத்திய ஜனங்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைகளைச் செலுத்துவார்களே யானால், அதுவே தற்கால நிலைமைக்கு அரிய தேசசேவையாகு மென்று சொல்லலாம். நாளுக்கு நாள் உயர்தரக் கல்வி பயின்றவர்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வந்துக்கொண்டிருக்கிறது. இதுவே சமூக வேற்றுமைக்கும், அதுகாரணமாக இன்னும் அனேக இன்னல்களுக்கும் இடம் கொடுப்பதும் தவிர, தேசமுன்னேற்றத்தையும் தடுக்கிறது.

தற்காலத்தில் தொழிலாளிகளிடத்திலும் வேலையில்லாத் திண்டாட்ட மேற்பட்டுக்கொண்டு வருகிறது. நம் தேசத் தொழில்களெல்லாம் அழிந்துவிட்ட தென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதன் காரணங்களைப்பற்றி இங்கே சொல்லவேண்டியது அவசியமில்லை. இப்போது கைத்தொழில் விஷயமாக ஸ்திரீகள் செய்யவேண்டிய காரியங்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக நமது தேசத்தில் கைத்தொழில்களென்று சொல்லப்படும் தொழில்கள் இரண்டுதான். அதாவது நெசவுத் தொழிலும் பட்டுத் தொழிலுமே யாகும். இந்த சந்தர்ப்பத்தில் நமது தேச ஆலைகளைப் பற்றியும், அங்கு நடக்கும் வேலை நிறுத்தங்களைப் பற்றியும் பத்திரிகை படிப்பவர்கள் சாதாரணமாய் அறிந்திருக்கக் கூடும். இந்த ஆலைகளைத் தவிர கைத்தறிகளில் அநேக கிராமங்களில் நாட்டு நூல்களும், நம்தேச ஆலைகளின் நூல்களாலும், அன்னியநாட்டு நூல்களாலும் நெசவுக்காரர்கள் முரட்டு ஜவுளிகளும், நயம் ஜவுளிகளும் நெய்து ஜீவனஞ்செய்து வருகிறார்கள். நாளடைவில் நம்மிந்து தேசத்தில் நூல்கள் நூற்பது நின்று போனதும், நம் தேசத்திய ஆலைகளில் போதுமானவளவு நூல்கள் கிடைக்காததினாலும், நயமான சீமை நூல்கள் அன்னிய நாடுகளியிருந்து இரக்குமதி செய்யப்படுவது சுலபமாக கிடைப்பதினாலும், சீமை நூல்களால் நம் நாட்டில் கைத்தறிகளில் நெய்து அனேகவித

மான ஜவுளிகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. நாளடைவில் அன்னிய நாட்டிலிருந்து வரும் ஜவுளிகளுடன் விலைவாசியில் போட்டி போடமுடியாமல் கைத்தறி நெசவுத் தொழில் அனேக விடங்களில் நின்று போய்க்கொண்டிருக்கிறது. இந்த தொகையிலீடுபட்ட அனேக ஸ்திரீகள் தொழிலை இழந்துக்கொண்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் அம்பா ஸமுத்திரம், கல்லிடைக்குறிச்சி முதலிய ஊர்களில் பாபனாசம் ஆலை நூல்களைக்கொண்டு அனேக முறட்டு ஜவுளிகள் நெய்யப்பட்டு மலையாள நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தது. மலையாளிகள் இந்த ஜவுளிகளைத்தவிர வேறொன்றையும் உபயோகப்படுத்துவதில்லை. இதேமாதிரி வெள்ளங்குளி, வீரவனல்லூர் முதலிய ஊர்களில் சரிகை கலந்து சீமை நூல்களால் நயம் ஜவுளிகள் தயார் செய்யப்பட்டு மலையாளத்திற்கனுப்பப்பட்டு வந்தன. இந்தத் தொழில்களால் இந்த ஊர்களில் அனேகத நசவுக்காரர்கள், ஸௌராஷ்டிரர்கள், அவர்கள் தொழிலில் சகாயம் செய்துவந்த அவர்கள் ஸ்திரீகள் இந்த சரக்குகளை கொள்முதல் செய்வித்த கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் இவர்களெல்லாம் செழிப்பாக ஜீவனம் செய்து வந்தார்கள். இப்போது மலையாளதேசத்தவர்கள் மேல்நாடுகளிலிருந்து நேராக வந்திறங்கும் ஜவுளிகளைத் தவிர வேறொன்றையும் உபயோகப்படுத்துவதில்லை. இதுகாரணமாக மேலே சொன்ன தொழிலாளிகள் வியாபாரிகள் ஆகிய எல்லோருக்கும் பிழைப்பு கெட்டுப்போய் விட்டது.

இதேமாதிரி நம்மிந்து தேசத்தில் மைசூர் முதலிய விடங்களில் பட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு இந்தப்பட்டுகளைக் கொண்டு பெங்களூர் பட்டுச் சேலைகள் நெய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பட்டெடுக்கும்தொழிலிலும்,இந்த நெசவுத்தொழிலிலும் அனேக ஸ்திரீகளீடுபட்டிருக்கிறார்கள். தற்காலத்தில் கிருத்திருமப்பட்டு யென்கிற நார்பட்டுக்கு இறக்குமதி வரிகுறைக்கப்பட்டு அந்தப்பட்டு ஒருபுறமும், சைனா, ஜப்பான் முதலிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் பட்டுகள் ஒரு பக்கமும் போட்டிபோட்டு மைசூர் பட்டு உற்பத்தித் தொழிலை நசுக்கி விடுகின்றன.

நான் மேலே சொன்னபிரகாரம் இந்ததொழில்களில் அனேக ஸ்திரீகளீடுபட்டிருக்கிறார்கள். ஜீவனத்திற்காக சொர்பகூலியில் திருப்திப்படுகின்றார்கள். அவர்கள் அவஸ்தைப்படும்போது மற்ற சகோதரிகள் டாம்பீக வாழ்வை யனுசரிப்பது நியாயமன்று. நம்முடைய சகோதரிகளுக்கு என்னுடைய வேண்டுகோளென்னவென்றால் நம்மதேசத் தொழில்களை ஆதரித்து அத்தொழில்களிலீடுபட்ட சகோதரிகளுக்கு காலக்ஷேமத்தை விளைவிக்க வேண்டுமென்பதே யாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்குத் தோன்றின வரையில் முக்கியமான தொழில் கதர் உற்

☞ நீங்கள் ஒரு தேசபக்தரா? அப்படியானால் விவேகபாநுவை படிக்க தவறவேண்டாம்! தேசபக்தி நிறைந்த பத்திரிகை இது தான்.

பத்தி செய்தலே சாலச் சிறந்தது. அதற்கு அடுத்தபடி நம் தேசத்தில் உற்பத்தியாகும் பட்டுகளைக்கொண்டும் நம்மதேசத்திய ஆலைகளின் நூல்களைக்கொண்டும்செய்யப்படும் தொழிலுர்தான். கதர்சேலைகளை அணியப் பிரியமுள்ளவர்கம்,களுதர்சேலையையணிய பிரியமில்லாதவர்களும் பெங்களூர் பட்டாடைகளை உடுத்துவது அந்த தொழில்களை விருத்திசெய்யும் மார்க்கமாகுல். கதர் சேலை 18-முழம் நீளமும்,அழகான கரைகளும், சாயமுமுள்ளது 10-ரூபாய் முதற்கொண்டு கிடைக்கிறது. நாம் இம்மாதிரி செய்வோமானுல் நம்முடைய எளிய சகோதரிகளுக்கும் ஜீவனத்தையும் உண்டாக்குவதுமல்லாமல், தேசசேவையும் செய்தவர்களாவோம். ஒவ்வொரு ஸ்திரீயும் தன்னுலியன்றவரையில் தேச சேவையிலும், சமூக சேவையிலும் யீடுபடவேண்டிய தவசியம். அவரவர்கள் சௌகரியத்தை பனுசரித்த துறைகளில் வேலைசெய்தால் போதுமானது. நம்தேசத் தொழில்களைப் பாதுகாப்பது ஒரு முக்கியமான துறையென்பது எனதபிப்பிராயம்.

குறிப்பு:— இந்திய பெண்மணிகள் நாட்டின் முன்னேற்றத்திற்குச் செய்பவேண்டிய கடமைகள் பலவுள. அங்ஙனம் பெண்கள் தங் கடமைகளை உணர்ந்து அதை நிறைவேற்ற முற்பட்டாரும் இது போழ்து சிறிது காணப்படுகின்றன. பெண்கள் சமுகத்தில் ஒரு சில கூட்டத்தினர் தங்கடமைகளைச் செய்யின், அதனுல் தங்கள் கடமை நிறைவேறிவிட்டதென்றும் கருதமுடியாது. நாட்டின்முன்னேற்றங்கருதும் பெண்மணிகள் தங்கள் சமுகத்தை கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் பண்படுத்தல் அவசியம். இதற்குப் படித்தபெண்களே முன்வரல் வேண்டும். படிப்பு வாசனையே இல்லாத பெண்கள் தங்கடமைகளை எங்ஙனம் நிறைவேற்ற முன் வருவார்கள்? ஆகவே,பெண்கள் முன்னேற்ற மடையவேண்டும் என்றும், கடமைகளைச் செய்ய முன்வருக வென்றும் எழுதுவதிலும், பேசுவதிலும் பயனில்லை என்பதை ஓர்க! பெண்கள் சமுகத்தில சிறந்த உறுப்பினராய சகோதரிகாள்! உங்கள் சமுக முன்னேற்றம்தேடுங்கால் அதற்குஅடிப்படையாகிய'பெண் கல்வி'யைக் கட்டாயப் படிப்பாகக் கொள்ளல்வேண்டும். அது தேசியக் கல்வியாக இருத்தல் வேண்டும். தேசியப் பற்றுகொண்டு கைவிடப்பட்ட ராட்டினத்தை மீண்டும் கையாளவேண்டும்: அப்பொழுதுதான் பெண்கள் தங்கடமைகளைச் செய்தவர்களாகவும், முன்னேற்ற மடைந்தவர்களாகவும் கருதப்படுவார்கள்.

வி. பா. ஆசிரியர்

☞ அன்பர்காள்! உங்கள் வாழ்நாட்களில் வீண் வழிகளில் எவ்வளவு ரூபாய் செலவழித்திருப்பீர்க ளென்பதை நீங்களே ஆழ்ந்து யோசியுங்கள்! நல்லவழியைப் போதிக்கும் விவேகபாநுவுக்கு ஒருவருடத்திற்கு ஏன் ஒருரூபாய் கொடுக்கக்கூடாதென்பதை சிந்தித்துப் பாருங்கள்!பாருங்கள்!!

பெண்களடக்கம்

ஆசிரியர். மூ. மாணிக்க நாயகர், புதுவை.

அறுசீர் விருத்தம்

இல்லற மென்னும் வான்சகட மிழுப்ப தற்கே யிணங்கியுளார்
வல்லி யனையாள் மணாளனுடன் மனமொத் திருந்து மேற்செலுத்த
நல்லன செய்து விருந்தோம்பி யல்லன போக்கி நாயகராய்க்
கல்லை நிகர்த்துக் கலங்காப்பஃ றீமை பொறுத்துப் பொலிவாரோ. 1

அன்பெனுங் கயிற்றா லாணும்பெண்ணு மழுத்த முறவே கட்டுண்டாற்
றுன்பம் வெயின்முன் பனிபோலே தூரப் போகும் பெற்றித்தால்
இன்பம் இன்ன ணேர்பொழுது மிடையறு தொழுது மெனுமறிவை
யன்பைப் பெருக்கா தழுங்கிவரு மரிவை கொண்டு தெளிவாளோ. 2

மனம்போல் வாழ்வு பெருகுமென்பார்மாற்றம்பொன்போற்பெருகிவாத்
தினமுங் கண்டார் தோகையர்கள் திருந்தா திருப்ப தென்விதியோ!
கனிமொழியென்றேபெண்மொழியைக் கழறும்பெருமைகொண்டிருந்து
நுனிசேர் அம்புடல் பாய்வதுபோ லுவலுஞ்சொற்கள் பாய்ந்திமோல். 3

மணஞ்செய் புருடன் வாய்திறந்து மாற்றமொன்றே மொழிந்திடினும்
கணஞ்சேர் சொற்கள் கணக்கின்றிக் கழறும் வழக்கங் கண்டனர் நங்
குணஞ்சேர் தோகை மயிலனையார் குற்ற மென்றே கூறிடினுந்
தணல்போற் றுன்பந் தந்திடும்பல் சண்டை நாளுஞ் சமைந்திடவே. 4

புருடன் சொற்ற வார்த்தையினாற் பொங்கும் வெகுளி மிகுத்துவாக்
கருடன் விரலாற் பிடிப்பதுபோற் கடுமை தோற்ற மைந்தர்களைத்
திருகி யடித்துப் பாத்திரத்தைத் திட்டெனப் போடும் பாவையர்கள்
பெருகி வரும்போ தவர்மக்கள் பேதை மக்களா காரோ. 5

மறைவாய்க் கேள்வன் மதிப்பைத் தீவழியாய்ப் பழிக்கும் மாதரசி
பறைவாய் தோற்றுந் தொனிபோலும் பகருங் குணங்கொள் மாதரசி
சிறையிற் கைதி செறிதுயரைச் செம்மற் கியற்றும் மாதரசி
நிறையின் மனையி லுயிர்வாங்க நிலவுங் கூற்றே மாதரசே. 6

திரைகட் கொழிக்குந் தண்கடலிற் சேரும் பொருள்கள் கரைதனிலே
திரையா லலைப்புண் டெற்றிடினுந் திரும்ப வதனுட் சேர்வதுபோல்
விரைவாய்மனத்துட்பொங்கிவரும்பொல்லாவெகுளிச்செயல்களெல்லாம்
விரைவாய்மனத்தேயடங்கிவிடும் விழைவுவேண்டும்வேற்கணார்க்கே 7

அடக்கம் பெண்கட் கணிகலமென் றறையுஞ் சொல்லைப் பாழ்படுத்த
வடக்கங் குலைத்து மனஞ்செல்வழி புகுந்து கெடுவ தழகாமோ!
அடக்க மமரர் குழாத்தினிலே யமைக்கு மென்றாற் பொருந்துமன
வடக்கங் கொண்டே யாணின்முன் னலர்வாய் திறவா திருப்பாரோ. 8

சீர்திருத்தப் பகுதி

தமிழ்நாடு இளைஞர் நல்வழி மன்றம்

அமைச்சர்

திரு. பு. செல்வராஜன் எழுதுவது

கோயில்களுக்கு சீர்திருத்தம்.

முன்தொடர்ச்சி.

கோயில்கள் எவ்வாறிருக்க வேண்டும்

ஏழைகளாகிய நாம் நினைத்தபோது கோயில்களுக்குப் போக உரிமையடைய வேண்டும், அல்லது மேற்கண்ட ஊழல்களுடைய கோயில்களை அடியோடு பகிஷ்கரிக்க முற்படல்வேண்டும். நம் பெரியார்களும் பல விக்கிரகங்களையும், பலதெய்வங்களையும் மறந்து 'ஒன்றென்றிரு. தெய்வம் உண்டென்றிரு' எனக்கூறியுள்ளார். நாம் பல தெய்வங்களையும், லஞ்சம்போன்ற வரிவாங்கும் கோயில்களையும் பகிஷ்கரித்து விடவேண்டும். ஆனால், அப்படிப்பட்ட பகிஷ்காரங்களிலிறங்கிவிட்டு, பின்னால் தெய்வம் ஒன்று உளதென்னும் ஞாபகமேயில்லாது நாஸ்திகனாகப்போய்விடக்கூடாது என்பதை யுன்னியே தெய்வம் உண்டென்றிரு என வலியுறுத்தி யிருக்கின்றார் மூதறிவாளர். கோயில்களுக்குப்போக பூரண சுதந்தரத்தை யடைந்த பின்னரே மற்ற சுதந்தரங்களை யடைய நாம் முயற்சித்தல் வேண்டும். கோயிலில் கடவுளின் ஞாபகத்தையுண்டு பண்ணும் அழகிய விக்கிரகங்களுக்கு மலர் சூட்டுவதும், மற்றும் பிற செய்வதும் நாமாகத்தானிருக்கவேண்டும். நமக்கிடையில் ஒரு தரகனிருத்தல் ;மிகவும் பாபகரமான காரியமாகும். ஏனெனில் அத்தகைய தரகர்கள் லஞ்சம் வாங்காமல் இலகுவான வேலையாகிய கற்பூரமும் கொளுத்தும் வேலையையும் செய்வதில்லை. நாமோ (தமிழர்கள்) லஞ்சமளித்தல் பாவமெனக் கருதுகிறோம்.

இந்நிலையில் தமிழர்களாகிய நாம் உயர்நிலை எய்தவேண்டுமாயின் ஆளுக்கொரு விக்கிரகங்கள், அகோர ரூபங்கள், அழுக்கடைந்த விக்கிர

கங்கள், முதலியன ஒழியவேண்டும். ஸ்வாமிக்கு நகைகளைப் பூட்டி மணவினை, மணவினைசெய்தல் முற்றும் நீங்குதல் வேண்டும். ஆதித்திராவிடர்கள் உள்பட அனைவரும் கோயிலுக்குப்போய்வர உரிமையிருக்குமாறு கோவில்கள் அமைக்கப்படல் வேண்டும். அங்கு பரத நடனம் கூடாது. சுங்க வரிபோன்ற கோயிலுக்குள் போவதற்குரிய வரிகள் விதிக்கப்படக் கூடாது. பிச்சைக்காரன் முதல் பிரபுவரை கோயிலுள்போக உரிமையிருத்தல் வேண்டும். கோயில்களைத் திருடர்களுக்குப் பயந்துகொண்டு 8-மணிக் கெல்லாம் மூடிவிடுவதைப்போல் மூடிவிடக்கூடாது. எப்பொழுதும் (இரவும் பகலும்) திறந்தே யிருக்கவேண்டும். விக்கிரகங்களின் மீது நகைகளைப்பூட்டிவைத்து மற்றொரு மனிதன் திருடுவதற்கு இடமுண்டாகும்படி செய்தல் கூடாது. கோயிலுள் பலவிக்கிரகங்கள் இருத்தலும் கூடாது. வேண்டுமானால் ஓரே அழகியவிக்கிரகம் அமைத்திருக்க வேண்டும். அங்கு எவ்வித அசுத்தமும் இருக்கப்படாது. அருகில் எவ்வித குடியிருப்பு வீடுகளும் இருத்தல் கூடாது. ஏனெனில் அங்கு குடிக்கூலிக்கு ஆட்களை வைத்தால் கூக்குரலிட்டுக்கொண்டே யிருப்பார்கள். சத்தம் அதிகப்பட்டால் மனம் ஒன்றுப்படாது. அங்கு பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரனென்ற பாகுபாடுகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோலாகவேண்டும். அத்தகைய கோயில்களே பழைய தமிழ் நாட்டில் தமிழர்களால் கையாளப்பட்டு வந்தது.

கோயிலைச் சுற்றிலும் புஷ்பச்செடிகளாலும், கொடிகளாலும், மரங்களாலும் கூடிய இயற்கை வனப்புடைய அழகிய வனங்களிருத்தல் வேண்டும். நாம் இயற்கை வழியைப் பின்பற்றுபவர்கள். நமக்குச்செயற்கைவழியும், செயற்கைத் தெய்வங்களும் அவசியமில்லை.

இயற்கையோடியைந்த கோயில்கள்

நம்பெரியார்கள் இயற்கை வழியைப் பின்பற்றி கோயில்களமைத்திருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். அதாவது பண்டைத்தமிழர் அங்கு இங்கு எங்குமுள்ள கடவுளைத் தங்களுக்குரிய இடங்களில் ஞாபகார்த்தமாகவும், பலர் ஒன்று கூடி கோயிலுக்குப் போவதனால் சகோதரத்துவமும், சமரசமும் பெருகுமென்றே கோயில்களை யமைத்தனர். அவ்வாறு ஏற்படுத்திய கோயில்கள் பல மரங்களினடியிலேயே உள்ளனவென்பது இங்கு கவனிக்கவேண்டிய ஒரு விஷயம். அதற்கு சான்றாக, திருக்குற்றாலம் எனுமூரில் கடவுளை குறுகிய ஆலமரத்தினடியில் வணங்கும்படி அமைக்கப்பட்டிருப்பதையும், இன்னும் பலாமரத்தடியிலும், கடம்ப வனத்திலும், மகிழ மரத்தடியிலும் கோயில்கள் அமைத்திருப்பதை எடுத்துக் காட்டலாம். மதுரையில் கடம்பவனத்தில் பூசிக்கப்பட்டமையால் கடம்ப வனநாதர் என்றும், சிதம்பரத்தில் தில்லை வனத்தில் பூசித்தமைகொண்டு தில்லைவனநாதரென்றும் பெயர் பெற்றனவாகும். திருவொற்றியூரில் மகிழமரத்தடியில் கடவுள் வீற்

திருந்தனரென்று சரித்திர ஆதாரங்களிலிருந்தும் தெரிய வருகிறது. இன்னும் கல்லால மரத்தடியிலும், அத்திமாத்தடியிலும், நாவல்மரத்தினடியிலும் கடவுள் சில உண்மைகளை அறிவாளருக்கு அறிவுறுத்திய தாகதேவார திருவாசகங்கள் முறையிடுகின்றன. இவைகளிலிருந்து தமிழரின் முக்கிய நோக்கம் கடவுளை இயற்கையோடு சேர்த்தே வணங்குவதென்பது புலப்படவில்லையா? அதைவிடுத்து நாம் தற்போது இருக்கும் நிலை என்னே! நம் கோயில்கள் எத்தகைய சீர்திருத்தத்தி லிருக்கின்றன?

அந்தோ! காலக்கேடு, தெய்வபக்தி மாந்தருக்கு அருகிவிட்டதற்கு காரணம் தற்காலத்திய கோயில்களின் சீர்கெட்ட முறையினாலேயே என்று அஞ்சாமல் கூறலாம். மக்கள் பல துறையில் கெடுவதற்கு தற்கால கோயில்களே காரணமாகிறது. கோயிலே, விபசாரித்துவத்தைக் கற்பிக்கிறது. கோயிலிலே திருடர்கள் உண்டாவதற் கிடைமாகவிருக்கிறது, தற்கால கோயில்களினால் ஏற்படும் தீங்குகள் பலப்பல,

சரியான வழிபாடு

பண்டைக் காலத்தில் தமிழர்களுக்கு விக்கிரகங்கள் இருந்ததே கிடையாது. எல்லோரும் உண்மையான தெய்வ வழிபாட்டைக் கைக்கொண்டிருந்தனர். ஒரே கடவுளை தமிழர்கள் வணங்கிவந்தனர். செம்மைப்படுத்தும் பொருள் தரக்கூடிய சிவமென்று கடவுளுக்குப் பெயர் கொடுத்திருந்தனர். இன்னும் அறிவாளிகளாயிருப்போர் தங்கள் மனதையே தெய்வ இருப்பிடமாகக்கொண்டு வணங்கி வந்தனர் என்பது பின்வரும் பாட்டால் விளங்கும்.

"உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படு நெய்யூட்டி யுயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

சில அறிவாளிகள் பாமரர்களுக்கென ஒரு உருவம் இருப்பது நல்லது, என்றெண்ணி இயற்கையோடு கூடிய கோயில்களை அமைத்து அதில் தலை, கண், மூக்கு, வாய், செவி, கை, கால், இவைகளையெல்லாம் அமைக்காது இலிங்க வடிவமாகக் கடவுளை அமைத்தனர். அக்காலத்து அத்தகைய இலிங்கங்கள் கோயிலிலிருக்க அவைகளுக்குப் பிரதிநிதிகளைப்போன்ற செம்பினாலும் பித்தளையினாலும் செய்த மனிதனைப்போன்ற உருவங்கள் கிடையாது. ஒரே விக்கிரகத்துடன் கூடிய கோயிலில் அனைவரும் உட்சென்று கடவுளை மலர்கொண்டு அருச்சித்து பாகொண்டு துதித்துவரலாம் கூலிகொடுத்தும் கூலிபெற்றும் கோயிலில் வேலைசெய்யும் தாசர்கள் கிடையவே கிடையாது, யார் யார் கோயி

ல்களுக்கு போகிறார்களோ அவர்களே பூசாரியே யொழிய தனியொரு பூசாரியும் கோயில்களில் ஏற்பாடானது கிடையாது. இன்றும் சில கிராமங்களில் புரோகிதரின்றி தாமாகவே கோயில்களை நடத்தி வருகின்ற தமிழர் எத்தனையோ பேருளர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அக்கோயில்களும் இயற்கை யமைப்புடன் கூடியிருக்கிறது. அம்மாதிரி கோயில்களே இப்பொழுது தமிழ்நாட்டிற்கு அவசியப்படுகிறது. ஆகையால் தற்போது தமிழ் நாட்டில் இருக்கும் முதலாளிக் கோயில்களை சீர்திருத்தவேண்டி யிருக்கிறது. அம்மாதிரி சீர்திருத்தி விட்டால் நாட்டில் மிகுந்துள்ள மூடத்தனமும், அடிமை புத்தியும் மறைந்து சுயமரியாதையோடு உண்மையான பக்தியும் தேசிய உணர்வும் ஒவ்வொருவர் மனதிலும் அரும்பும் என்பதில் ஐயமே யில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ் நாட்டுக் கோயில்கள் பலவகைக்கேடுற்று நாளுக்குநாள் க்ஷீணத்தசை யடைந்துகொண்டே போகிறது, இன்னும் பூசாரிகள் கோயில்களைவிட்டும் அகப்பட்டு பண்டைக்காலத்திய நிலைமையில் கோயிலை அமைத்தாலொழிய இன்றிருக்கும் கோயில்கள் அனைத்தும் முதலாளிக் கோயில்களே ஏனெனில் அதிக்கிரமம் நடப்பது முதலாளிகள் வீட்டில்தான், ஆடம்பரம் அரும்புவது முதலாளிவீட்டில்தான். மற்றும் பல அநீதிகளுக்கும் முதலாளியின் வீடுதான் இலாக்காகிறது. அதே போன்று கோயில்களும் இருக்கின்றன. இதற்குக் காரணம் பணம்தான். கோயில்களில் அதிகபணம் இருப்பதனால் அதைத் தின்றுவிட்டு மடாதிபதிகளும், மகந்துகளும், பூசாரிகளும், குருக்களும் கோயிலை முதலாளிதன்மையி லாக்குகின்றனர். அப்பணத்தின் கொடுமையினாலேயே மனிதன் லோபத்தனத்துக்கு அடிமையாகி முதலாளி யாகிறான். இத்தகைய இடுக்கண்கள் தமிழர்களாலேயே மனிதன் லோபத்தனத்துக்கு அடிமையாகி முதலாளியாகிறான். இத்தகைய இடுக்கண்கள் தமிழர்களாலேயே தமிழ்நாட்டிற்குநேர்ந்ததென்பதுமிகை படக்கூறியதாகாது, தமிழர்கள் கோயில்கட்டும் பணத்தைக்கொண்டு கல்விச்சாலை அமைத்திருப்பார்களே யானால் எத்தனைக் குழந்தைகள் இன்று தமிழ் நாட்டு ஞான வீரர்களாய் இருப்பார்கள், வீணில் கோயில்கட்டி அவைகளை விபசார விடுதிகளாய்ச் செய்தல் பரிதாபத்திலும் பரிதாபம்!

தமிழர்கள் என்னசெய்ய வேண்டும்?

உறங்கிக்கொண்டிருக்கும் தோழர்களே! கவனியுங்கள். வெறும் கோயில்களையும் குளங்களையும் கட்டி விடுவனால் பிரயோசன மொன்றுமில்லை, அதை சரியான முறையில் பிரயோசனப் படுத்திக்கொள்ளும் வழியை மாந்தர்க்கு அளித்தல் வேண்டும். அதற்குரிய வழி கல்வி கற்பித்தல் ஒன்றுதான். ஆகையால் ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் கல்வி கற்பிக்கும் இடங்களான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதற்கும் அதற்கு உதவிசெய்வதற்கும் முன்வந்து அதையே தங்கடமையாகக் கொண்டு நாளையே இவ்விடுக்கண்களை களைந்தெறியமுற்படுங்கள், கோயில்

களுக்குப் பணம் கொடுத்து சோம்பேறித் தனத்தில் பிறர் ஆழ்ந்து விடும்படி செய்யாதீர்கள்! உங்கள் பணத்தினால் கோயில்! முதலாளித் தன மடைந்து விடும்படி செய்து விடாதீர்கள். தமிழ்நாட்டில் உறங்கிக் கொண்டிருக்கும் தமிழர்கள் தாங்கள் உறக்கத்தைத் தொலைத்துத் தமிழர்களின் நாகரீகத்தையும், பாஷையையும், உலகெலாம் பரவச்செய்ய முயற்சிக்கவேண்டும் தமிழ் மக்கள் மூடக்கொள்கையினின்றும் ஆடம்பர வாழ்வினின்றும் விடுபட்டு இயற்கை வாழ்க்கை நடத்தவேண்டும். அங்ஙனே தமிழ்நாடு அடையுமேல் மறுபடியும் உலகின் குருபீடம் தமிழ் நாடே என அச்சமின்றி நாம் கூறுவோம். தமிழ்நாட்டில் இன்று தமிழ் மக்கள் பல சிறு விஷயங்களையும் உண்பன, உடுத்துவன, போன்றவைகளிலும் சச்சர விட்டுக்கொள்ளுகின்றனர்: அத்தகையவர்களெல்லாம் உண்மையுணர்ந்த சிறந்த வீரர்களாய் வெளிவருதல் வேண்டும். எல்லாம் வல்ல முழுமுதற்பொருள் தமிழர்களாகிய நம்மை வீரர்களாய்ச் செய்து நம்மில் உள்ள அற்ப வழக்கங்களை அகற்றி அருளுவாரென்று நினைக்கும்படியான காலம் சமீபித்துவிட்டது: தமிழ்நாடும் விழித்துக் கொண்டு சமூகப்போர் துவக்கி யிருக்கிறது. அதில் தமிழர்கள் வெற்றி பெறுவார்களாக: முதலாளித் தனம் அழிந்து சமதர்மம் ஓங்குமாக. "தமிழ்த்தாய் வாழ்க"

எறும்பின் சரிதை

ஆசிரியர்-மு. மாணிக்க நாயகர் - புதுவை.

(ஒரு சம்பாஷணை)

(முன் தொடர்பு)

மணிவண்ணன்:—கனிகண்ணா! எறும்பின் பொதுக்குணங்களை யின்னும் மிகும்போதும்! மேலே தொடர்

கனிகண்ணன்:—ஓரிடத்தில் அவைகளுக்குரிய பண்டம் வைக்கப்பட்டிருப்பின் அவை தம் ஸ்பரிசினியினால் அதைத் தெரிந்துகொண்டு வெகு சீக்கிரமாக அவ்விடத்தைச் சேரும். அங்கே இன்னம் பலவுஞ் சூழும். அவைகள் அனைத்தும் அப்பண்டத்தை யருந்தும். இதனால் அவைகளிடம் "சுற்றந் தழுவுதல்" உண்டென்பதை நீ

யறிக. ஓரிடத்திலொரு பண்டத்தைக்கண்ட எறும் பொன்று அதைத் தன்னாற் றூக்க முடியுமானாற்றானே தூக்கிக்கொள்ளும். அன்றேல் அது உடனே ஒருமேட்டின்மேல் ஏறிப்பார்த்து தன்னினத்தவர் இருப்பின் அவைகளையும் கூட்டிக்கொண்டு போய் அப்பொருளைத் தூக்கிச் செல்ல முயற்சி செய்யும். எறும்பின் உடல் மிகச் சிறியதே எனினும், மற்றப் பிராணிகளைப்போல் விகாரமாய்க் காணப்படாது. அதுமிக மென்மையுடையது. பார்வைக்கு வெகு ரம்யமாக விருக்கும். அது அழகுடன் பளப்பளப்பாய் விளங்கும். அவைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத் திற்குப் போகுங்காற் சாறை சாறையாய்ப் போகும். அப்போது நாம் அவைகளைப் பார்த்து ஆச்சரியப் படாமலிருக்க முடியாது.

ஒருபொருளை ஒன்றின்பின் ஒன்றை யடுக்கிவைப்பின் அது எவ்வளவு வரிசையாகவும், ஒழுங்காவும், காணப் படுமோ அதைப் போலவே, அவைகளும் வரிசையாகக் காணப்படும். அவைகள் அங்ஙனம் போவதைக் கண்ட நம் பெரியோர்கள் "எறும்பூரக் கற் குழியுமே" என்றும், "எறும்பூரக் கல்லுந்தேயும்" என்றும வியந்து கூறிப்போந்தனர். ஒவ்வோர் சமயம் அவை தம் நெறியினும் பட்டு மறுபடியும் அந்நெறியில் வந்து சேர்ந்து விடுகின்றன. மணிவண்ணா! எறும்புகளின் பொதுக்குணங்களை யொருவாறு என் அற்ப ஆராய்ச்சியிற் கிடைத்த மட்டிற் கூறினேன்.

மணிவண்ணன்—சரி! கணிகண்ணா! எறும்புகளில் எட்டுவகைகள் உண்டென்று கூறினையே! அவைகளைப்பற்றிச் சொல்லலாமன்றோ? முதலிற் பிள்ளையாரெறும்பு என்பதைப் பற்றிச் சொல்லத் தொடங்கு! பார்ப்போம். (தொடரும்.)

:: நடத்தை ::

நெல்லை-சு. வெங்கடராமன் எழுதுவது.

ஒவ்வொரு மனிதரும் செய்யும் செயல்கள் அவரவர்களது நடத்தையாகவும், இந்நடத்தையைக் கொண்டு விளங்குவது அவரவர்களது குணங்களாகவுமாகும். எனவே மனிதர்கள் செய்யும் செயல்கள் அவர்களது குணங்களைக் காட்டாநிற்கிறது. இச்செயல்கள் நடத்தையெனப்படுகிறது. மனத்திலே சிந்தைசெய்த பின்னர், கிரியாம்சையில் நடைபெறுகிறது நடத்தை. இதனைக்கொண்டு அறிவது குணம்.

இங்ஙனம், நடக்கும் நடத்தையாது என ஒரு சிறிது யோசித்துப் பார்ப்பின் மனிதன் அங்ஙனந்தான் நடக்கவேண்டுமென விரும்பி ஆசைவைத்து நடந்துக் கொள்வதேயாகும். ஆதலின் நற்செயல்களைச் செய்து நன்குவாழ நன்னடத்தையும், நற்குணமும் வேண்டும். எனவே, முக்கியமாய் நல்வழியில் நடக்க ஆசைவேண்டும். இஃதிருப்பின் நன்கு சிறப்புடன் மேன்மையுற்று வாழலாம்.

"குணவான், குணமே சிறந்தது, தங்கமானவன், நல்லவன், நாணயமானவன்" என்ற சாதாரண உலகவழக்கச் சொற்களே உதாரணமாகும். ஒருவன் முழு மடையனாயிருப்பினும், நற்குணமிருந்தால், நல் நடத்தையுமுடையவனென மிக மரியாதை செய்யப்படுவதோடு போற்றவும் படுகிறான்.

உலகிலே ஒருவன் நன்கு கடைத்தேறி சிறப்புடன்வாழ, புத்திசாலித்தனத்தையும், கல்வி அறிவையும்விட குணமும் ஒரே நோக்கமுமிருந்து நடந்தால்,பெருமையுடன் நன்கு வாழலாம். நேர்மை என்று ஒன்றை அறிவதைவிட, அதனைக் கிரியாம்சையில் நடந்து வினையாற்றிக் காட்டலே நன்று. மனிதன் நன்மையாக, மேன்மையாக, சந்தோஷமாக,வாழவேண்டின், அதற்கேற்ப நடக்கவேண்டும். நற்செயல்களே, நல்ல அழகும், மேன்மையும், புகழுமுள்ள நாட்களை அளிக்கின்றன. ஆகவே, ஒருவன் நடத்தை சிறப்புடனிருப்பின் அவனி முழுதும் ஒரு குடைக்கீழாளலாம். ஆட்சி எத்தகைத்து?

மனிதனின் வாழ்நாள் அவனது செயலாலேயே வரையறுக்கப்பட்டிருக்கிறது. மற்றும், வாழ்நாள் ஒருவனது செயலாலேயே (நடத்தையாலேயே) மணமும் குணமும் கொண்டு பரந்து நிற்கவோ, அன்று தாழவோ நேரிடுகின்றது. ஆதலின் நடத்தையே மேன்மைக்கும், தாழ்மைக்கும், பெருமைக்கும், சிறுமைக்கும் காரணமாகவிருப்பதால், வாழ்நாளின் காலமுழுதும் நல்ல அரும்பெரும் செயல்களாலேயே கழிக்கப்படல்வேண்டும். இதனை நோக்கியே கபிலரும் காலன் வரும்முன்னர் நற்பெரும் செயல் பலசெய்து நற்புகழெய்துங்கள் உடனே என்றுரைத்தார்.

வேலையை அசட்டைசெய்து தள்ளியோ, உபாயமாக விலக்கியோ அன்று வேறுவிதமாக நடந்தோ, ஒருவன் தன்வாழ்நாளை இன்பமாக்கமுடியாது. வாழ்நாளில் ஒருவன் தான் செய்கையில் செய்துநடந்த நடத்தைக்கும், நடந்துக்கொள்ளும். நடந்துகொண்டுவரும் நடத்தைக்கும், இனித் தான் செய்யப்போகும் செயல்களுக்கும் எவன் ஒருவன் ஊன்றிப்பார்த்தும் அவன்செய்த-செய்கிற-செய்யும் காரியங்களில், நடத்தைகளில் எப்பொழுது கவலை உண்டாகவில்லையோ, அப்பொழுது அவன் இவ்விஷயங்களில் சரியாக நடந்திருக்கிறான் என்றே கொள்ளல் வேண்டும். ஆகவே, நல்வழியில், நடக்கவிரும்பி நல்மனமும், குணமும், கொண்டோர்கள் அதற்குத்தக்க நின்று நடக்கவேண்டும்.

அறிவாளிகள், தங்கள் நடத்தைகளில் கலந்து பேசித் தெளிந்து, நடப்பனவறிந்து, வேலையின் போக்கைக் கவனித்து, ஆபத்துகளை யெல்லாம் சகித்துக் கொண்டு இவைகள் யாவையும் கடந்து முழுமையுடைய கடவுளை நம்பி நடந்து வெற்றிபெறுகிறார்கள்.

வாழ்நாளில் உண்மை ஜயத்திற்கு-வெற்றிக்கு என்னவேண்டும்? பணம் வேண்டுமோ? சக்தி வேண்டுமோ? அறிவு வேண்டுமோ? புகழ் வேண்டுமோ? சுயேச்சை வேண்டுமோ? ஆரோக்கியம் வேண்டுமோ? என்னவேண்டும், இவைகள் ஒன்றுமே வேண்டாம். ஆனால் ஒன்றே ஒன்றுவேண்டும். அது எது? அதுதான் குணம்-நற்குணம்-நல் நடத்தைமாத்திரமே வேண்டும். தீங்கற்ற பரிசுத்தமான ஆவாவும் இத்துடன் சேர்ந்து விளங்கின், அம்மனிதனது வாழ்க்கை மிக உண்மையான, மேன்மையான வாழ்க்கையாய் சிறந்துவிளங்கும்.

ஆதிமுதற் கடவுளான ஆண்டவன் அவனியில் எல்லோரும் கவிவாணர்களாகவோ, சங்கீதஞ்ஞர்களாகவோ, பெரும் சிற்பசாஸ்திரிகளாகவோ, சாஸ்திரஞ்ஞர்களாகவோ, சிறந்த போர்வீரர்களாகவோ, அன்றி இன்னும் இதுபோன்ற அறிஞர்களாகவோ இருக்கவேண்டிப் படைக்கவில்லை என்றாலும், ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அளவு நம்சக்தி முழுமையும் உண்மையிலும், நேர்மையிலும், நாணயத்திலும், பயபக்தியிலும், ஆழ்ந்த சிந்தனையிலும், மேன்மையிலும், காம்பீரியத்திலும், வேலையில் சகிப்புத்தன்மையிலும், டாம்பீகத்தில வெறுப்பிலும், தரும குணத்திலும், கொடையிலும், இரக்கத்திலும் செலுத்தி நடத்தல்வேண்டும்.

இங்ஙனமாக நமது முழுநோக்கத்தையும் இக்குணங்களில் செலுத்தி நடப்பின் நல்ல குணவான்களாவதோடு, மேற்கண்ட அறிஞர்களில் ஒருவராகவுமாகி நல்நடத்தையாளரெனப் பல்லோரும் கொண்டாட மன நிம்மதியோடும் உற்சாகத்தோடும் மேன்மையோடும் வாழலாம்.

ஆனால், நற்குணங்களை-நடத்தைகளை நீக்கி நேர் மாறாக துர்க்குணமாம் சனியனை ஒப்புக்கொண்டு எந்த ஓரே ஒரு குணத்தில் நடந்தாலும் அக்குடும்பம் முழுதும தலைமுறையாகக் கஷ்டப்படும் என்பதில் ஐயமில்லை.

ஒரு மனிதனின் குணமே அவனை மேன்மைப்படுத்துகிறது. என்வே ஒரு நற்குணத்தைச் செயலில காட்டுகிறான் அவன். இதனால் நற்செயல்களே ஒரு மனிதனைக் கௌரவப்படுத்துகிறது. நற்செயலுக்கு நற்சிந்தை அவசியம். நற்சிந்தைக்கு உயர்ந்த நோக்கம்வேண்டும். ஒவ்வொருவரும் கௌரவத்தோடு மேன்மையாகவே வாழநினைப்பர். அவமானப் படும்படியான வெறுக்கத்தக்கதான செயல்களை ஒருபொழுதும் எவரும்செய்ய விரும்பார்கள். இந்த விஷயத்தில் ஒவ்வொருவருக்கும சொந்தமாகவே ஒரு நல்ல எண்ணம் உண்டு. எது? எது? அதுதான் மனச்சாட்சி. ஆகவே மனச்சாட்சியின்படி நடக்க நல்நடத்தையில நடக்கவும் அதனால் பெரும்பய னெய்தவுங்கூடும்.

முடிவாக நாம் கூறப்புகின் அறிவுயாது எனில், கடவுளுக்குப் பயந்து நடப்பதேயாகும். தீமையிலிருந்து விலகுவதே அறிந்தமையுமாகும். இயற்கைக்கு அடுத்தது பழக்கமேயாகும். ஆதலின் பழக்கம நற்பழக்கமாதல வேண்டும். பழக்கமே வழக்கம். பலசெயல், பழக்கமாகவும், பலபழக்கம், குணமாகவும், பலகுணம நடத்தையாகவும், பல நடத்தை நல அதிர்ஷ்டத்திற்குக் காரணமாகவும இருக்கிறது. ஆதலின் தீமையிலாதன செய்தலே சாலச்சிறந்ததாகும். குன்றனையாரும குன்

றவர் குன்றுவகுன்றி யனையசெயின் என்றார் தமிழ்வேதம் விரித்தவள்ளுவனார் இதுபற்றியே.

மனிதசமூகம் இருவிதமாகப் பிரிக்கப்படலாம். அவை உபகாரி, அபகாரி என இருபிரிவாகும். அபகாரிகளானல் நண்பர்களைப் பகைவர்களாகவும், கவலையே கொண்டு மனதைப் பண்படுத்திக்கொண்டும், வாழ்நாளை துயர்நாளாகச் செய்துக் கொண்டும், உலகத்தைச் சிறைவாசமாகவும், சாக்காட்டை பெரும்பயமாகவும் செய்துக்கொள்வார்கள். ஆனல் உபகாரிகளானல், இன்பமும், அன்பும், மாண்பும் செறிந்த மனத்தின்வாதம், உலகில் எவரும் அநுபவியாத ஒரு சிறந்த மேலான சந்தோஷகாலமாகவும் செய்துக்கொண்டு பெருத்த தேவப்பிறவியாய் வாழ்வார்கள்.

எனவே உபகாரிகளாகி அன்பர்களாகி, ஞானிலம சிறக்கயாவரும் வாழ்க.

விவேகத் துணுக்குகள்

(கலாவல்லவன் எழுதுவது)

(முன்தொடர்ச்சி)

உலகத்தில் எவ்வளவுக் கெவ்வளவு நல்லவனாக ஒருவன் நடந்தாலும் அவனுக்கு நல்லவன் என்ற பெயர் கிடைக்காது. ஆயினும் ஒவ்வொருவரும் நல்லவர்களாகவே நடந்துக்கொள்ளல்வேண்டும்.

முற்கால நூன்முறை யொழுக்கத்தின்படி நடக்க நூற்பயிற்சியுள்ளார் முற்படினும்,உலகத்தினர் அவர்கள் நடையைப் பழிக்கா நிற்கின்றனர். தற்கால உலக நடை முற்கால நூனடைக்கு ஒத்தில்லாததினல் முற்கால நடையை இக்காலத்தவர் பழிக்க ஏதுவாகிறது.

ஆயுள் முழுவதும் ஒருவனுக்கு நல்லவனாக நடந்தும், ஒருவன் கிண்டிவிடுங் கோள்வார்த்தைகளைக் கொண்டே அவன் நம்மைக் கெட்டவனாகப் பேசிவிடுவான். இதுவே தற்கால உலகத்தின் புதுமுறை. (நன்றியறிதல்)

அநீத வழிகளை மிகுதியாகவும், நீதிவழிகளைக் கொஞ்சமாகவும் உலகம் கைப் பற்றுகின்றது.

முறை தவறிய செயல்களையே ஒருவன் தன்காலமுழுதுங் காணவேண்டியவனாகி விட்டானானல், அவன் சங்கடக்கை மாறுபட வேறு வழியும் வேண்டுமோ?

அழகு திமிரினும் பணத்திமிரும், அதனினும் படிப்புத்திமிரும் அதனினும் அதிகாரத்திமிரும் தன்னளவில உயர்ந்துவருவதை நாம் காண்கிறோம்.

முற்காலத்துப் பழமொழிகளனைத்தும் இக்காலத்தவர்கட்கு நஞ்செனத் தோற்றுகின்றன.

பெரியோர்க்குச் சிறியார் மரியாதை செய்யாவிடினும், சிறியோர்க்குப் பெரியோர் மரியாதையேன் செய்யவில்லை என்று வினவப் பிறகாலம் எதிர் நிற்கும் போலும்!

படிப்புக்கு விசனமும் சோம்பலும் வியாதியுஞ் சத்துருக்கள். தங்கடன் முன்னின்றான் கதறோர்க்கு மதிப்புகுறையும்.

பிரபஞ்ச விநோதச் செய்திகள்

கான்பூர் கமால்கான் தெருவிலுள்ள ஒருவர் வீட்டில் ஒரு கோழிமுட்டையில் மிகச் சிறிய பசுவின் கன்றொன்று தோன்றியதாம். அதற்கு சின்னஞ் சிறிய நான்கு கால்களும், ஒரு சிறிய வாலு மிருக்கின்றன.

* * * *

பம்பாயில் மணி ஒன்றுக்கு 70-மைல் வேகம் ஓடக்கூடிய மின்சார ரெயில் வண்டி யோட்ட ஆரம்பமா யிருக்கிறது. அவ்வண்டித் தொடரில் 3000-டன் பாரம் ஏற்றலாம். வண்டி 3160-குதிரையின் வேகம் ஓடிய சக்தியுடையதாம்.

* * * *

ஸ்தம்பூல் பட்டினத்தில் ஒரு ஸ்திரீ, தவளையைப்போல் ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறாளாம். அந்தக் குழந்தையை டாக்டர்கள் பார்த்து ஆச்சரியப் பிறவி யெனக் கூறுகிறார்கள்.

* * * *

காப்டன் ஜீ. டி. ஹாவில்லாண்ட் தமது மனைவியுடன் 100-குதிரை வேகமுள்ள விமானத்திலேறி 70-நிமிஷத்தில், பூமியிலிருந்து 21000-அடிக்குமேல் உயரப் பறந்தாராம். இதுதான் இதுவரை பறக்கப்பட்டிருக்கும் மஹா உன்னதமாகும்.

* * * *

டென்மார்க்கு வாசியான 15-வயதுள்ள பால்ஹோல்ட் என்னுஞ் சிறுவன் 44-நாட்களுக்குள் இப்பூவுலகத்தைச் சமீபத்தில் பிரதக்ஷணம் செய்து வந்து விட்டானாம்.

* * * *

உலகத்தில் மிக வேடிக்கையான கடிகாரம் ஒன்று ஜெர்மனிய மாதாகோவிலின் கோபுரமொன்றில் வைக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கடியார டயல்களைப்போலல்லாது, இதன் டயலில் 24-மணி குறிப்பிடப்பட்டிருக்கிறதாம். இது மணிக்குத் தக்கவாறு 1-முதல் 24-வரை மணி அடிக்கிறதாம்.

* * * *

உலகில் மனிதர் வசிக்கும் பகுதிகளுக்குள்ளே மிகவும் உன்னதமானது திபேத் நாட்டிலுள்ள ஒரு பௌத்த கோயில் ஆகும். இந்தக் கோயில் கடல் மட்டத்திற்கு 17000-அடி உயரத்தில் இருக்கின்றது.

* * * *

உலகத்தின் கண்ணே மிகவும் விலையுயர்ந்த நாற்காலி ரோமாபுரியில் இருக்கும் போப் குருவினுடையதே. இது முழுமையும் வெள்ளியினால் செய்யப்பட்டது. இதற்கு பதினெட்டாயிரம் பவுன் செலவு ஏற்பட்டது.

☞ விவேகவளர்ச்சிக்கு இன்றியமையாத பத்திரிகை விவேகபாநு ஒன்றே யாதலின், எல்லோரும் சந்தாதாரராகச் சேருங்கள்! வருஷ சந்தா ரூபாய் ஒன்றேதான்.

விடுகவி விஞ?

இலக்கம் - 2

(புதுவைக்கிழார்)

ஆனதொரு மூன்றெழுத்தா லமைந்த வார்த்தை
யறைந்திடிலே யதன்பொருளும் விலங்கென் றாகும்;
தானமிரு முதலெழுத்து குறைந்து நிறைற்
றரணியுடை கடலிட்டதோ ரலையு மாகும்;
மோனமிரு மிரண்டாவ தெழுத்து மாணடான்
முழங்குமொளி யென்றதற்கே யுரையு மாகும்;
ஞானமொடு கல்விநலந் தான மாகு
நல்லறிஞ ரிதன்பெயரை நவிலு வீரே.

குறிப்பு:— இவ்விடுகவி விஞவுக்கு விடை எழுதும் ஒவ்வொருவரும் "விவேக பாநு"வின் சந்தாதாரராகவே இருத்தலவேண்டும். சந்தாதாரரல்லாதவர்கள் விடை எழுத விரும்பின் விடையுடன் இரண்டணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். கிடைக்கும் விடைகளைப் பரிசோதித்து சரியான விடைவரும் முதல் இருவருக்கு கீழ்க்கண்ட பரிசு அனுப்பப்படும்.

முதல் பரிசு மங்கள பூஷணம் என்ற நாவலும், இரண்டாவது பரிசு சுந்தரவதனி என்ற நாவலும் கொடுக்கப்படும்.

ஆசிரியர் தீர்மானிப்பதே முடிவானது. இது சம்பந்தமான கடிதப் போக்கு வரத்துகள் வைத்துக்கொள்ளப்படமாட்டா. 15-9-28க்குள் விடை நமக்குச்சேரும் படிச்செய்தல் வேண்டும். பரிசோதனை நாள் 20-9-28.

ஆசிரியர்:— "விவேகபாநு" ஆபீஸ்,
நெ. 20, நம்மாள்வார் தெரு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, சென்னை.

ஆ! வட்டியின் கொடுமை!

வட இந்தியாவில் சாந்திப்பூர என்னும் நகரில் ஒருவன் ரூபாய் 22. பதி மூன்று வருடங்களுக்கு முன் கடன் வாங்கியது, 6-மாதத்திற்கு ஒரு தடவை வட்டிக்கு வட்டிச் சேர்த்ததில் 26-லட்ச ரூபாயாகி கோர்ட்டில வழக்கு செய்ததில் 431-ரூபாய்க்கு ஜட்ஜ் தீர்ப்பு செய்தனராம்.

"விவேகபாநு"வில் சென்ற மாதம் வெளிவந்த விடுகவி வினாவுக்கு சரியான விடையளித்தவர்கள்

சந்தனப் பொட்டு

1-வது பரிசுபெற்றவர்

A. E. அருணாசலம், ஆம்பூர்.

2-வது பரிசுபெற்றவர்

V. S. விசுவநாதன்,

நெ. 30, மூத்தியால் செட்டித் தெரு, புரசைவாக்கம், சென்னை.

குறிப்பு:— இன்னும் அநேகர் சரியான விடையளித்தவர்களுமுண்டு, அவர்களின் பெயரை ஈண்டு குறிப்பிட இடமில்லையாதலின், பரிசுபெற்ற இருவர்களின் பெயரைமட்டும் மேலே குறிப்பிட்டோம்.

வி. பா. ஆசிரியர்.

வியாபாரிளுக்கோர் விண்ணப்பம்.

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பிணாங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கும் ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூபா	8	0	0
,, அரைப்பக்கத்திற்கு	ரூபா	5	0	0
,, கால்பக்கத்திற்கு	ரூபா	3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்டவேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்குச் சகாயஞ் செய்யப்படும்.

மானேஜர்— "விவேகபாநு" ஆபீஸ்,

நெ. 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து,

சௌகார்பேட்டை, சென்னை.

விவேகபாநு பஞ்சாங்கம்

விபவவஹு ஆவணிமீ

கலியுகாதி—5030, சாலிவாகன—1851, பசலி—1338, ஹிஜ்ரி,—1347 கொல்லம்—1103.

இங்கிலீஷ் 1928 — ஆகஸ்டு — செப்டம்பர்மீ

தமிழ் தேதி	இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	16	வியா	பிர 29-52	மக 35-11	மந்திர பிரயோகம்
2	17	வெள்	துதி 28-51	பூர 36-26	கரிநாள்
3	18	சனி	திரு 29-21	உத் 38-51	கிரிஷியாரம்பம் செய்ய
4	19	ஞாயி	சது 32-16	அஸ் 42-16	முகூர்த்தநாள்
5	20	திங்கள்	பஞ் 35-56	சித் 47-14	கெருட பஞ்சமி
6	21	செவ்	சஷ் 39-21	சுவா 53-24	பத்திரிகை பிரசுரிக்க
7	22	புதன்	சப் 44-29	விசா 58-24	தானியங்கள் விற்க
8	ஆகஸ்டுமீ 23	வியா	அஷ் 49-20	அனு 60-11	புதுபெண்ணழைக்க
9	24	வெள்	நவ 54-49	அனு 5-18	கரிநாள்
10	25	சனி	தச 58-36	கேட் 11-48	விருந்து சாப்பிட
11	26	ஞாயி	ஏகா 60-10	மூல 17-25	கெர்ப்பாதனம் செய்ய
12	27	திங்கள்	ஏகா 2-52	பூரா 22-83	தானியம் விதைக்க
13	28	செவ்	துவா 4-46	உத்ரா 26-12	குரு / செ ராகு
14	29	புதன்	திர 5-52	திரு 28-29	
15	30	வியா	○சது 6-11	அவி 30-12	14 கன்-பு
16	31	வெள்	பௌ 5-51	சத 3?-9	17 கன்-பு
17	1	சனி	பிர 2-21	பூர 29-12	சூ-பு சுக்
18	2	ஞாவ்	திரு 54-26	உத்தி 26-57	
19	3	திங்க	சது 49-23	ரேவ 24-11	சனி கே
20	4	செவ்	பஞ் 43-47	அசு 20-23	வாகனம் வாங்க
21	5	புதன்	சஷ் 37-57	பர 17-11* கி	கிருத்திகை
22	செப்டம்பர்மீ 6	வியா	சப் 31-46	கிரு 12-46	கோகுலாஷ்டமி
23	7	வெள்	அஷ் 25-48	ரோ 9-4	வாசல் கால் நாட்ட
24	8	சனி	நவ 19-56	மிரு 4-39	யாத்திரை செய்ய
25	9	ஞாயி	தச 14-21	திரு 1-6	உபகாரியங்கள் செய்ய
26	10	திங்	ஏகா 10-9	பூச 55-43	காலை 7½க்குள் வித்யாரம்பம்
27	11	செவ்	துவா 6-19	ஆயி 54-19	நவக்கிரக சாந்திசெய்ய
28	12	புதன்	திர 3-18	மகம் 53-57	கரிநாள்
29	13	வியா	●சது 1-12	பூரம் 54-29	சர்வஅமாவாசை
30	14	வெள்	அமா 1-4	உத்ர 57-24	உபகாரியங்கள் செய்ய
31	15	சனி	பிர 2-11	அஸ் 60-4	தானியங்கள் வாங்க

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS.
Editor—S. K. GOVINDASWAMY PILLAI.